பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 22 திங்கட்கிழமை (05-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:160

## 'சிரான்' அங்கீகரித்த 15 திட்டங்கள் உடனே நடைமுறைப்படுத்தப்படும்

### பிரதமரின் உத்தரவுப்படி துரித நடவடிக்கை

கொழும்பு,மே5

உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கான உபகுழு 'சிரான்' அங்கீகரித்த 15 திட்டங்கள் உடனே நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திட்டங்கள் சம்பந்தப்பட்ட கட்டட நிர்மாணப் பணிகளுக்கு விரைவில் 'ரெண்டர்கள்' கோரப்படவுள்ளன.

பதினைந்து திட்டங்களையும் மேற்கொள்வதற்கு வேண்டிய பணத்தை உலக வங்கி வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நிதியிலிருந்து வழங்கும். அந்தப் பணம் கிடைப்பதற்கு முன்னர் அவசரத் தேவைக்கு அரசு திரட்டிய நிதியிலிருந்து பணத்தை வழங்கும். பின்னர் உலகவங்கியிடமிருந்து அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்.

பிரதமரின் பணிப்புரையின் பேரில் பிரதமரின் செயலாளரும், திறைசேரிச் செயலாளரும், கொள்கை உருவாக்கல், நடைமுறைப்படுத்தல் அமைச்சின் ஆலோசகருமான ஆர்.பாஸ்கரலிங்கம சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசனை நடத்தி, துரித அபிவிருத்தித் திட்டப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

வீதி அமைத்தல், ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள், நெல்களஞ்சியப்படுத்தல் வசதிகள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பொத்துவில் ஆகிய பகுதிகளில் அவசர சுகாதாரப் பராமரிப்புப் பிரிவுகள், மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்க

(12ஆம் பக்கம் பாக்க)

## அரசிடம் ஆயுத உதவி கோருகிறது ஈ.பி.டி.பி.!

கொழும்பு,மே5

பாதுகாப்புக்காக ஆயுதங்களை வழங்குமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

கடந்த மாதத்தில் மட்டும் ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் நான்கு பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். கட்சி உறுப்பினர்களுக்கு தொடர்ந்தும் கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, அவர்களின் பாதுகாப்புக்காக ஆயுதங்களை வழங்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பு அரசிடம் கோரியுள்ளது என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

துப்பாக்கி கலாசாரம் மீண்டும் தீவிரமடைந்து வருவதால் உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

ஆயுத உதவி கோரும் வேண்டுகோளை ஈ.பி.டி.பி. எப்போது அரசிடம் முன்வைத்தது என்ற விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை.

கட்சியின் தலைமைப்பீட வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு இதுபற்றி கேட்டபோது தற்போதைய நிலையில தமது பாதுகாப்புக்கு ஆயுதங்கள் அவசியம என்பதே கட்சியின் நிலைப்பாடு என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-9)

# யாழ். கோட்டை முன்பாக இன்று காலை மறியற்போர்!

## படைமுகாம் அமைப்பதை எதிர்த்து வெகுஜன எழுச்சி

யாழ்ப்பாணம்,மே5

**யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் புதிதாக படைமுகாம் நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதியில் இன்று காலையில் பெரும் மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.**

**பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த அடையாள எதிர்ப்புப் போராட்டம் இடம் பெறும்.**

யாழ்.நகரின் மத்தியில் சுபாஸ் ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் மற்றும் அவற்றின் சுற்றாடலில் அமைந்துள்ள 512ஆவது பிரிகேட் படைத்தளத்தை அப்படியே யாழ்.கோட்டைப் பகுதிக்கு இடம்மாற்ற அரசு முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

கோட்டைப் பகுதியில் புதிய முகாமை நிறுவுவதற்கான முன் ஆயத்த வேலைகளை இராணுவத்தினர் ஆரம்பித்திருக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக கோட்டையின் உள்ளேயும் வெளியேயும் துப்புரவுப் பணி உட்பட முகாம் அமைப்பதற்கான வேலைகளில் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்,

நகரில் பொதுமக்களின் வாழ்வுக்கு இடைஞ்சலாக உள்ள ஒரு படைத்தளத்தை நகரின் இன்னொரு பகுதிக்கு

(12ஆம் பக்கம் பாக்க)

## யாழ். நகர படைத்தளத்தை பலாலிப் பகுதிக்கு மாற்றுக!

### பிரதமருக்கு விநாயகமூர்த்தி கடிதம்

யாழ்ப்பாணம்,மே5

யாழ்நகரில் சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களில் அமைந்துள்ள பிரிகேட் படைத்தளத்தை மாநகரசபை எல்லைக்கு வெளியே - மக்கள் குடியிருப்புகள் இல்லாத ஒரு பகுதிக்கு - மாற்றவேண்டும். அல்லது அதனை பலாலி பிரதேசத்தில் அமைக்கவேண்டும்.

- இவ்வாறு பிரதமருக்கு ஆலோசனை கூறியுள்ளார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

யாழ். கோட்டைப் பகுதியில் புதிய முகாம் அமைக்கும் படையினரின் நடவடிக்கையை நிறுத்தும்படி கோரி அவர் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். நகருக்குள் புதிதாக படைமுகாம் அமைக்கப்படுவதை பொது மக்கள் விரும்பவில்லை என்பதை ஏற்கனவே தங்களிடம் நேரடியாகவும் கடிதமூலமும் தெரிவித்திருந்தேன். தற்சமயம் கோட்டைக்கு பின்புறமாக முகாம் அமைக்க முயற்சி எடுக்கப்படுவதாக அறிகின்றேன்.

இந்தப்பிரதேசமும் மக்கள் செறிவாக வாழ்கின்ற - நடமாடுகின்ற பகுதியாகும். இந்தப் பகுதியில் முகாம் அமைக்க எடுக்கும் முயற்சிகள், தற்சமயம் முன்னெடுக்கப்படும் சமாதான செயற்பாடுகளைப் பாதிக்கும். அத்துடன் மக்களின் இயல்புவாழ்க்கையையும் சீரழிக்கும்.

நகர்ப்பகுதிகளில் உள்ள ஹோட்டல்களில் அமைந்துள்ள முகாம்களை

(12ஆம் பக்கம் பாக்க)

## சமாதான முயற்சிகளில் இந்தியா இனி தீவிர அக்கறை செலுத்தும்

### சமாதான செயலகம் அறிவிப்பு

கொழும்பு,மே5

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபடவிருக்கிறது. நோர்வே, ஜப்பான் ஆகியவற்றின் தூதுக்குழுக்களுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் நடத்திய பேச்சுக்கள் வெற்றியளித்திருக்கின்றன என்று அரச சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பான உச்சிமாநாட்டில் புலிகளும் இந்தியாவும் பங்குபற்றுவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது என்றும் -

ஒஸ்லோவில் நடந்த சமீபத்திய உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளவில்லை. ஆனால், வாஷிங்ரனில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டது. அமைச்சர் மிலிந்த மொறகொடவும் சமாதான செயலகத் தலைவர் பேனாட் குணதிலகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வத் சிங்ஹாவுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியதாகவும் சமாதான செயலகம் மேலும் தெரிவித்தது. (ஐ-9)

## புலிகளை மீண்டும் பேச்சுக்களில் ஈடுபடச்செய்யும் முயற்சிகள் ஆரம்பம்

### ஹெல்கிசன், சொல்ஹெய்ம், அகாஷி கொழும்பில்

கொழும்பு,மே5

அரசுடனான சமாதானப் பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் அப்பேச்சுக்களில் ஈடுபடச் செய்வதற்கான அரசியல், ராஜதந்திர முயற்சிகள் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இம்முயற்சிகளுக்காக கொழும்பு வந்திருக்கும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர், சமாதான அனுசரணையாளர், ஜப்பானின் விசேடதூதுவர் ஆகியோர் நேற்று அரசாங்கத் தலைவர்களுடன் ஆலோசனைகளை நடத்தினர். அவர்கள் நாளைமறுதினம் கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவர்களையும் சந்திக்கவிருக்கின்றனர்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியும் நேற்றுமுன்தினமிரவு கொழும்பை வந்தடைந்தனர். கொழும்பு வருவதற்கு முன்னர் அவர்கள் புதுடில்லி சென்று இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்திருந்தனர்.

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் இலங்கைக் குழுவின் ஓர் உறுப்பினரான அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமான பேர்ணாட் குணதிலக ஆகியோரும் புதுடில்லி சென்று இந்திய வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுநடத்திவிட்டு கொழும்பு திரும்பியிருக்கின்றனர்.

நோர்வேயின் சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம், வெளியுறவு அமைச்சின் ஆலோசகர் லிசா நோல்டன் ஆகியோர் நேற்றுக்

(12ஆம் பக்கம் பாக்க)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

# காரைதீவு விசேட அதிரடிப்படை முகாம் அகற்றப்பட மாட்டாது; பிரதமர் உறுதி!

## ஹரீஸ் எம்.பி. திட்டவட்டமாகக் கூறுகிறார்

கல்முனை,மே5

காரைதீவு விசேட அதிரடிப்படை முகாம் அங்கிருந்து அகற்றப்படமாட்டாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு உறுதி அளித்திருக்கிறார் என்று திட்டவட்டமாகக் கூறினார் திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்.

கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கென உள்ள படைமுகாம்களில் ஒன்றையேனும் அகற்றமுற்பட்டால் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் மறுபரிசீலனை செய்யும் என்று பிரதமரிடம் தெளிவாகச் சொல்லி வைத்திருக்கிறோம் என்றும் ஹரீஸ் எம்.பி. சொன்னார்.

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மூன்றுமாடி வகுப்பறைக் கட்டடத்திற்கான இரண்டாம்கட்ட வேலைகளை ஆரம்பித்துவைக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத் தலைமையில் வைபவம் நடந்தது. ஹரீஸ் எம்.பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:-

காரைதீவு விசேட அதிரடிப்படை முகாம் அகற்றப்படப்போகிறது என்ற அச்சம் இப்பிரதேச முஸ்லிம்களிடையே எழுந்துள்ளது. ஆனால், அது ஒருபோதும் நடக்காது. அதற்கான உத்தரவாதத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்குத் தந்துள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் நாம் தெளிவாக இருக்கின்றோம். பிரதமருடன் மட்டுமல்லாது ஜனாதிபதியுடனும் பேசி வருகின்றோம். இப்பகுதி முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் படைமுகாம்கள் எதுவும் அகற்றப்படக்கூடாது என வலியுறுத்தியுள்ளோம்.

எமது கோரிக்கைக்கு செவிசாய்க்காது ஒரு படைமுகாமேனும் அகற்றப்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ், அரசுக்கு வழங்கி வருகின்ற ஆதரவை மீள் பரிசீலனை செய்யவேண்டி ஏற்படும். இதனை பிரதமரிடம் தெளிவாகச் சொல்லி வைத்துள்ளோம்.

இனப்பிரச்சினைத் தீர்வின்போது முஸ்லிம்களை திருப்திப்படுத்தாத எந்தவோர் ஏற்பாட்டையும் முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாது. வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்படுமாயின் முஸ்லிம்களுக்குத் தனியான அரசியல் அதிகார அலகு தரப்படவேண்டும். அதற்குக் குறைவான எந்தவொரு தீர்வையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை - இப்படி அவர் கூறினார்.

இந்த வைபவத்தில் 'ரெபியா' பணிப்பாளர் எஸ்நிஸாமுதீன், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.ஏ.ஜப்பார், பிரதேச செயலாளர் ஏ.எம்.மன்சூர் ஆகியோரும் உரையாற்றினர். (ஐ)

## அமைச்சர் ஹக்கீமுடன் அகாஷி நாளை கிழக்குக்கு விஜயம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியும் நாளை கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்கின்றனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று மாலை யசூசி அகாஷியை பிரதமரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

கிழக்கு மாகாண நிலைவரத்தை யசூசி அகாஷி நேரில் அறிந்து கொள்வதற்காகவே அவர் அங்கு அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுடன் விசேட சந்திப்புக்களை அகாஷி நடத்தவிருக்கிறார். (ஐ)

## இதல்கஸ்ஹின்ன தோட்டத்தில் மண்சரிவு; ஐந்து லயன்கள் முற்றாக அழிந்தன!

### 85 குடும்பங்கள் பாடசாலைகளில் தஞ்சம்

அப்புத்தளை இதலகஸ்ஹின்ன தோட்டத்தில் ஐந்து லயன்கள் மண்சரிவால் அழிந்தன. அதிர்ஷ்டவசமாக இந்மண்சரிவில் எவரும் சிக்கவில்லை. இந்த லயன் அறைகளில் வசித்த 85 குடும்பங்கள் தோட்டப் பாடசாலையிலும் உறவினர்களது வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளன.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பணிப்பின் பேரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என இ.தொ.கா. ஊடகப் பிரிவு செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

மண்சரிவு காரணமாக நான்கு பாலங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் இன்று பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று புதிய குடியிருப்புகள் அமைப்பது தொடர்பாக ஆராயவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விபத்தில் இளைஞன் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே5

காக்கைதீவுப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த மெற்றிக் லயட்ஷன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-5-15)

## மாலைதீவு ஜனாதிபதி நாளை இங்கு வருகிறார்

கொழும்பு,மே5

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை இலங்கை வருகிறார்.

அன்று மாலை அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசுவார்.

நாளைமறுதினம் அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இரு தரப்பு வர்த்தகம் தொடர்பாக கலந்துரையாடுவார்.

நான்கு நாள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

## வினைத் திறமைகாண் பரீட்சைக்கு விண்ணப்பம்

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான வினைத் திறமைகாண் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 9ஆம் திகதி ஆகும்.(எ-31-185)

## வடக்கு - கிழக்கு யுத்தம்:

## வடமத்திய மாகாணத்தில் பாதிப்புற்ற 1,000 குடும்பங்களுக்கு வீடமைப்புக்கடன்

கொழும்பு,மே5

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதன் முதல்கட்டமாக வடமத்திய மாகாணத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் சுமார் 1000 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப்படவிருக்கின்றன.

தெரிவுசெய்யப்படும் இக்குடும்பங்களுக்கு குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து 10 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும் என்று அரசாங்கப் பேச்சாளரின் அலுவலகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றது.

இத்திட்டத்தைச் செயற்படுத்த சுமார் 5 கோடி ரூபா செலவாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையின் பேரில் வீடமைப்பு அமைச்சு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்.

வடக்கு, கிழக்கிற்கும் ஊவா மாகாணத்துக்கும் இத்திட்டம் பின்னர் விரிவுபடுத்தப்படும். (ஐ)

## ஈ.பி.டி.பி. அமைப்பாளரின் சடலம் விசாரணையின் பின் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மே5

பருத்தித்துறைப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட, கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் பருத்தித்துறை அமைப்பாளருமான தர்மராசா ஜெயராசாவின் சடலம் மரணவிசாரணையின் பின் அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிவானின் பணிப்பின் பேரில் பிரேத பரிசோதனையை யாழ்.சட்ட வைத்திய அதிகாரி எஸ்சிறி ராஜேஸ்வரன் மேற்கொண்டார். அதன் பின் சடலம் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவரின் நெற்றியில் பாய்ந்த துப்பாக்கிக் குண்டு அவரது மூளையைத் தாக்கியதால் மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியவந்தது.

ஜெயராசாவின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ்நகரில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்று சோக இசை ஒலிபரப்பப்பட்டது. கறுப்புக் கொடிகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

குடாநாட்டில் உள்ள ஈ.பி.டி.பி. அமைப்பின் அலுவலகத்திலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. (ஐ-3-5-12-15-70)

## ஒரு மாதத்துக்குப் பின் நாளை நாடாளுமன்றம் கூடுகிறது

கொழும்பு,மே5

ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலத்துக்குப் பின்னர் நாடாளுமன்றம் நாளை மீண்டும் கூடுகிறது. சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பது குறித்து விவாதிக்க நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் ஏற்கனவே கோரியிருந்த போதும் முன்னர் தீர்மானிக்கப்பட்டபடியே நாடாளுமன்றம் நாளை கூடுகின்றது.

இதனால், சமாதானப் பேச்சு இடைநிறுத்தப்பட்டிருக்கும் விடயத்தை எதிர்க்கட்சிகள் நாளை விவகாரமாக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

எவ்வாறாயினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை சபையில் விசேட அறிக்கை ஒன்றை விடுப்பார் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். நாளை நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில், பிரதமரின் அறிக்கை குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சியினர் கோரலாம் என எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# யாழ்.கோட்டையில் படைமுகாம் அமைக்கும் முயற்சி உடன்படிக்கை மீது அவநம்பிக்கையை உருவாக்கும்

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.கோட்டையில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சி, புரிந்துணர்வு உடன்படிக்கை மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சீகுலைத்துவிடும் என்று யாழ்மாவட்ட விவசாய, நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே சமாசம் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா இராணுவம் யாழ்.கோட்டைப் பகுதியில் புதிய இராணுவ முகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து படைமுகாம் அமைப்பதை நிறுத்துமாறு எமது இயக்குநர்சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது தொடர்பான அறிக்கையை தங்கள் மேலான கவனத்துக்கு அனுப்பி வைக்கிறோம்.

ஏற்கனவே மக்கள் செறிவாக வாழும் யாழ்நகரப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் மற்றும் காவலரண்கள் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாகத் தொடர்ந்தும் அகற்றப்படாமல் உள்ளன. அத்துடன் யாழ்மத்திய நகரப் பகுதியில் அமைந்துள்ள 512ஆவது படைப்பிரிவினை யாழ்.கோட்டைப் பகுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையினை ஸ்ரீலங்கா அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொள்வதாக அறியவந்துள்ளது.

இச்செயற்பாடானது புரிந்துணர்வு நடவடிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவே அமைந்துள்ளது. மக்களது இயல்பு வாழ்நிலையையும், அமைதியையும் நிரந்தர சமாதானத்துக்கான முன்னெடுப்புக்களையும் அடிநாதமாகக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இச்செயற்பாடு அற்றுப்போக வைத்துவிடும்.

மக்களது நலனோம்பும் கூட்டுறவுத்துறையினராகிய நாம், பின்வரும் காரணங்களுக்காக யாழ்.கோட்டைப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் அரசாங்கத்தினது முடிவையும், தொடர் செயற்பாடுகளையும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென கோருகின்றோம்:-

★ இயல்பு வாழ்நிலை என்பது மக்கள் எதுவித அச்சமுமின்றி, இடரின்றி சுமுகமாக அன்றாட செயற்பாடுகளை மனநிறைவுடன் மேற்கொள்வதற்கான சூழ்நிலையைக் குறிக்கும். யாழ்.மாநகர சபையின் ஒரு பகுதியிலிருந்து இன்னோர் பகுதிக்கு இராணுவ முகாமை மாற்றுவதானது மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்களை எவ்வகையிலும் நீக்குவதாகாது.

★ புதிதாக அமைக்கப்படுகின்ற இராணுவ முகாமுக்கு அருகில் அனைத்துத் தீவுப் பகுதிகளுக்குமான ஒரேயொரு தரைவழிப் பாதை அமைந்துள்ளது. புதிய இராணுவ முகாம் அமைக்கப்படுதல் தீவுப் பகுதி மக்களது சுதந்திரமான போக்குவரத்துக்கு அச்சுறுத்தலாகும்.

★ இயல்புவாழ்க்கை மீண்டும் திரும்பும் என்ற நோக்கில் புனரமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களினது உச்ச மையமாக விளங்குகின்ற மாவட்டக் கூட்டுறவுச் சபை வளாகத்தில், மாவட்டக் கூட்டுறவுச் சபை அலுவலகம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இறைவரித் திணைக்களம், தொழில்த் திணைக்களம் என்பன அமைந்துள்ளன. இந்த வளாகத்தை நோக்கி தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள வருகின்றார்கள். இவ்வாறான சூழலில் இராணுவம் நிலைகொள்வது மக்களுக்குப் பெரும் இடையூறாக அமையும்.

★ இதேபோன்று இப்பகுதிகளில் தபால் திணைக்களம், யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம், ரெலிகொம் லிமிடெட் அலுவலகம், விலை மதிப்பீட்டுத் திணைக்களம் என்பன இயங்கி வருகின்றன. இவற்றின் சுமுகமான இயங்குதலுக்கு இடர்கள் ஏற்படும்.

★ புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தையில் தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கூடித் தங்கள் தேவைகளை நிறைவேற்றுகிறார்கள். இப்பகுதியில் இராணுவத்தின் நிலைகொள்வது இவ்வகை செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும்.

★ தென்னாசியாவில் முதன்மை பெற்றதும் தமிழ் மக்களது பண்பாட்டு மையமாகக் கடந்த காலத்தில் விளங்கி, பின்னர் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டு மீண்டும் புனரமைக்கப்படுகின்ற யாழ். மாநகர சபை பொது நூலகத்திற்கு மிக அண்மித்து இப்புதிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்கள், மாணவர்கள், பொதுமக்கள், கல்விமான்களுக்கு அமைதியான கல்வித்தேடலுக்கு இது இடையூறாக இருக்கும்.

★ விவசாயம், சிறுகைத் தொழில், கடல் உணவுகளை சந்தைப்படுத்தும் வாய்ப்பு யாழ்.நகரப் பகுதியிலேயே உள்ளது. எனவே யாழ்.நகரை நோக்கி வரும் மக்களுக்கு புதிதாக அமைக்கப்படும் இராணுவ முகாம் பெரும் இடரை, அச்சத்தை ஏற்படுத்திவிடுமாகையால் மக்களது நாளாந்த சந்தைப்படுத்தும் வாய்ப்பு முற்றாக தடுக்கப்பட்டுவிடும்.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் இராணுவ முகாம் புரிந்துணர்வு நடவடிக்கையை மீறுகின்ற செயலாகும்.

இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்பட்டு மக்கள் மீளக் குடியேற வேண்டும் என்ற நல்நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு நடவடிக்கையானது நம்பிக்கையை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க வேண்டுமாயின் சிறிலங்கா அரசு கோட்டைப் பகுதி உட்பட எங்குமே புதிய இராணுவ முகாமை அமைக்கும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். (ஐ-3)

# ஈராக்கியப் புராதன நகரத்தில் மனிதப் புதைகுழி கண்டுபிடிப்பு!

பக்தாத்,மே5

ஈராக்கின் புராதன நகரான பபிலோனில் பாரிய மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1991 ஆம ஆண்டு சதாம் ஹுசைனுக்கு எதிரான மக்கள் புரட்சி தோல்வியில் முடிந்தது. அந்தச் சமயத்தில் கொல்லப்பட்டவர்கள் இப்புதைகுழியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இப்புதைகுழிக்குள் கறைபடிந்த போர்வைகளுக்குள் சுற்றப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் கிடந்தன. எஞ்சியுள்ள அடையாளங்களைக் கொண்டு தமது உறவினர்களின் எச்சங்களைத் தேடியறிவதில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்புதைகுழி குறித்துத் தமக்கு முன்பே தெரியுமென்றும் - ஆயினும் சதாமின் ஆட்சியின் போது இதனைத் தோண்டிப் பார்க்க எவரும் முன்வரவில்லை என்றும் - அப்பகுதி மக்கள் கூறினர்.

இதேவேளை, அப்பகுதியில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர், புதைகுழிக்குள் சிறுவர்களின் எலும்புக் கூடுகள் பல இருப்பதாகக் கூறுகின்றனர்.

புதைகுழியில் காணப்படும் மண்டை ஓடுகளில் துப்பாக்கி தோட்டா துளைத்த அடையாளம் அல்லது கூரான ஆயுதத்தால் தாக்கிப் பிளந்த அடையாளம் காணப்படுவதாகவும் -

ஆய்வாளர்கள் இப்புதைகுழியை ஆராய்ந்து வருவதாகவும் - அமெரிக்கப் படையைச் சேர்ந்த லெப்டினன்ட் டேவிட் லூயிஸ் தெரிவித்தார்.

கடந்த மாதம் பக்தாத்துக்குள் அமெரிக்க இராணுவத்தினர் நுழைந்து - சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் - ஈராக்கில் பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



ஈராக்கின் பபிலோன் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் தமது உறவினர்களின் எச்சங்களை தேடும் ஈராக்கியர்கள்.

# ஆயுத உற்பத்திக்கான முன்னாள் அமைச்சர் கைது!

பக்தாத்,மே5

ஈராக்கல் சதாம் ஆட்சியின்போது ஆயுதத் தயாரிப்புக்குப் பொறுப்பாக இருந்தவர் உட்பட சதாமின் 3 சகாக்களைத் தாம் கைதுசெய்துள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்

அமெரிக்காவால் தேடப்படும் 55 ஈராக்கியர்களின் பட்டியலில் 16ஆவது இடத்தில் உள்ளவரும், துணைப் பிரதமர் மற்றும் இராணுவ தொழிற்சாலைத்துறை அமைச்சர் பதவிகளை வகித்தவருமான அப்துல் ரவாப்முல்லா குஷவஷ் என்பவரே தற்போது பிடிபட்டுள்ளவர்களின் முக்கியமானவர் என்று அமெரிக்கா கூறுகிறது. இவருடன் சதாமுக்கு இரக்கமற்றவர் என்று கூறப்படும் ஈராக்கின் முன்னாள் துணை அதிபர் மற்றும் சதாமின் மற்றொரு சகா ஆகியோரும் கைதாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயுத உற்பத்திக்கு பொறுப்பான அமைச்சராகப் பதவிவகித்த குவாஷ் பிடிபட்டுள்ளதால், அவரிடமிருந்து பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான பல இரகசியங்களைப் பெறமுடியும் என்று அமெரிக்கா நம்புகிறது. (ஒ)

# பெரும் பரபரப்பிற்கு மத்தியில் 'சோயுஸ்' கலம் தரையிறங்கியது!

மொஸ்கோ,மே5

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து 3பேர் அடங்கிய குழு பாதுகாப்பாக மீண்டும் பூமியை வந்தடைந்தது. 'கொலம்பியா' விண்வெளி ஓட விபத்தின் பின்னர் பூமிக்கு மீளத் திரும்பிய முதலாவது விண்வெளிக் குழு இதுவாகும்.

ஆயினும், பூமியில் தரையிறங்கத் திட்டமிட்டிருந்த இடத்திலிருந்து சுமார் 400கிலோ மீற்றர்களுக்கு அப்பால் தரையிறங்கிய விண்கலத்தையும் அதிலிருந்தவர்களையும் தேடிக் கண்டுபிடிக்க சுமார் 2மணித்தியாலங்கள் பிடித்தது. இந்த கால அவகாசத்துக்குள் 'கொலம்பியா' விண்வெளி ஓடம் போன்றே இந்த விண்கலமும் விபத்துக்குள்ளாகிவிட்டதோவென சந்தேகம் எழுந்தது. இதனால் உலகளாவிய ரீதியில் விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான நிலையங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் 5மாத காலத்துக்கும் மேலாகத் தங்கியிருந்து ஆய்வுகளில் ஈடுபட்ட அமெரிக்க வீரர்கள் கென் போவெர் சொக்ஸ், டொன் பெட்டிட் ஆகியோரும் ரஷ்ய ஆய்வாளர் ஒருவருமே பூமி திரும்பியுள்ளனர்.

இவர்கள் பூமிதிரும்பிய 'சோயுஸ்' விண்கலம் கஸகிஸ்தானின் பாலைவனப்பகுதியில் நேற்றுத் தரையிறங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் விண்கலத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆனால், தரையிறங்கவேண்டிய இடத்தில் விண்கலம் தரையிறங்கவில்லை.

விண்வெளி வீரர்கள் 7பேருடன் பூமிக்குத் திரும்பிய வேளையில், வெடித்துச் சிதறிய 'கொலம்பியா' வண் வெளி ஓடம் போன்று 'சோயுஸ்' விண்கலமும் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகம் எழுந்தது. ஆயினும், மீட்புப் படையினர் நடத்திய தேடுதலில் தரையிறங்க வேண்டிய இடத்திலிருந்து 400 கிலோ மீற்றர்களுக்கப்பால் விண்கலமும் 3 விண்வெளி வீரர்களுடன் பாதுகாப்புடன் தரையிறங்கியமை கண்டுபிடிக்கப்பட்டது.

முன்னதாக இந்த விண்கலத்தில் அமெரிக்க வீரர் ஒருவரும், ரஷ்ய வீரர் ஒருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு கடந்த வாரம் சென்றிருந்தனர். அவர்களிடம் பணிகளை ஒப்படைத்துவிட்டு இந்த மூன்று வீரர்களும் பூமிக்கு திரும்பியுள்ளனர். அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த வீரர்கள் பிற நாடொன்றின் விண்வெளிக்கலம் மூலம் அமெரிக்கா அல்லாத பிற நாட்டு மண்ணில் தரையிறங்கியுள்ளது இதுவே முதற் தடையாகும் (ஒ)



சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்றவர்கள் அங்கு தங்கியிருத்தவர்களுடன்....

# 'சார்ஸ்' தாக்கி மருத்துவர்கள் இறப்பது சீனாவில் அதிகரிப்பு!

பெய்ஜிங்,மே5

சார்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் அந்நோய் தாக்கி உயிரிழக்கும் சம்பவங்கள் சீனாவில் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. மருத்துவர்கள் மட்டுமன்றி, மருத்துவ உதவியாளர்களும் கூட சார்ஸ் நோய்த் தாக்கத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

பெய்ஜிங், குவாங்டாங், ஹன்ஷி ஆகிய நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு சார்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்த சில மருத்துவர்கள் அதே நோய் தாக்கிப் பலியாகினர். மேலும் 778மருத்துவ ஊழியர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெய்ஜிங் நகரில் மட்டும் 300 பேர் பாதிக்கப்பட்டு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவில் சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்தினால்தான் உலகின் பிற பகுதிகளில் கட்டுப்படுத்துவது எளிதாகும் என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

இதற்கிடையில், சீனாவில் மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ள ஷாங்காய் நகரில் சார்ஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெய்ஜிங் நகரில் சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு ஷாங்காய் நகருக்கு வருவோரை 14 நாள்கள் தனிமைப் படுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ)

## ஆர்ஜென்ரீனாவில் வெள்ளப்பெருக்கு!

ஆர்ஜென்ரீனாவின் வடக்கு பிராந்தியமான சண்டாபேயில் ஏற்பட்ட மழை வெள்ளப் பெருக்குக் காரணமாக குறைந்தது 18 பேர் உயிரிழந்தனர்.

சலாடோ நதி பெருகியதில் அப்பிராந்தியத்தின் 40 சதவீதமான பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர நேரிட்டுள்ளது.

இந்த வெள்ளப் பெருக்கு தேசிய அனர்த்தமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் பல சடலங்கள் மீட்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த 500 ஆண்டுகளில் ஏற்பட்ட மோசமான வெள்ள அனர்த்தம் இதுவென வர்ணிக்கப்படுகிறது. (ஒ)

# ரஷ்யாவில் நடந்த ஹெலி விபத்தில் செய்தியாளர் உட்பட 12பேர் பலி!

மொஸ்கோ,மே5

ரஷ்யாவில் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 12பேரும் உயிரிழந்தனர்.

பின்தங்கிய பகுதியான சிட்டா பிரதேசத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில் காட்டுத் தீயைப் படம் பிடிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் நால்வரும் அடங்குவர். இவர்களைத் தவிர விமானி ஒருவரும் தீயணைப்புப்படையினர் 7பேரும் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

விபத்துக்குள்ளான எம்-16 ரகக் ஹெலிகொப்டர் 15தொன்கள் கொள்ளளவுள்ள இராட்சத வாளி மூலம் தண்ணீரை எடுத்துச்சென்று காட்டுத் தீ பரவியுள்ள இடத்தில் ஊற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது. ஏற்கனவே இரு தடவைகள் இவ்வாறு தண்ணீரை எடுத்துச்சென்று ஊற்றிவிட்டு மீண்டும் நீரை நிரப்பத் திரும்பிய சமயமே இந்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது. நீரை ஊற்றிவிட்டு திரும்பிய போது இராட்சத வாளி பிணைக்கப்பட்டிருந்த 'கேபிள்' ஹெலிக்கொப்டரின் வால்புற விசிறியில் சிக்கியதாகவும் - இதனால் தடுமாறிய ஹெலி தரையில் மோதி நொறுங்கியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## பாகிஸ்தானில் உள்ள

# அமெரிக்கத் தூதரகத்தை தாக்கும் திட்டம் முறியடிப்பு!

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை வெடிகுண்டுகள் நிரம்பிய விமானம் மூலம தாக்கும் அல்கெய்டாவின் திட்டம் முறியடிக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் அமெரிக்காவிற்குள் அல்கெய்டா தாக்குதல் நடத்தலாம் என்று அமெரிக்க உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை . விடுத்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

சிறிய விமானம் அல்லது ஹெலிகொப்டர் மூலம் கராச்சியில் உள்ள அமெரிக்கத் தூதரக அலுவலகத்தைத் தாக்கும் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் நிலையில் அல்கெய்டா இருந்தது. ஆனால், உரிய நேரத்தில் அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டது.

கடந்தாண்டு பாரசீக வளைகுடாவில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் போர்க் கப்பல் மீது இதுபோன்ற தாக்குதலை நடத்த அந்த அமைபபு திட்டம் வகுத்திருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

கராச்சியில் கடந்த வாரம் 5பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 135 கிலோ வெடிமருந்து கைப்பற்றப்பட்டது. விசாரணையில் அவர்கள் அமெரிக்க தூதரக அலுவலகத்தை சிறிய விமானம் மூலம் தாக்கத் திட்டமிட்டிருந்தமை தெரிவந்தது.

இதனால், அமெரிக்காவிலும் சிறிய விமானங்களைக் கொண்டு அல்கெய்டா தாக்குதல் நடத்தலாம் என்று எச்சரிக்கப்படுகிறது என்று அவர் தெரிவித்தார். (ஒ)



தாய்லாந்தின் நக்கோன்பத்தோம் நகரில் மேதினத்தன்று உடல் பருத்த பெண்களுக்கான 'ஜம்போ' அழகிப் போட்டி இடம்பெற்றது. இதில் பட்டம் வென்ற சுபபோன்தோங்க்ஹைகரையும், போட்டியில் கலந்து கொண்ட அழகிகளில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ஈராண்டு நினைவஞ்சலி



செல்வி

## சப்த நவாஜினி செல்லத்தம்பி

(கனிசு)

(புலோப்பளை கிழக்கு - பளை)

*திதி: சதுர்த்தி*

அன்னை அரவணைப்பில் 25-12-1987 — ஆண்டவன் அரவணைப்பில் 27-04-2001

துள்ளித்திரிந்த உனது நினைவுகள்
அள்ளி அள்ளி எறிந்தாலும் போகுமோ?
ஈராண்டுகள் மறைந்தாலும்
நான்கு வார்த்தைகள் நினைவிலிருக்கும்
எங்கள் அன்புக் கனிசுவே! எங்கு சென்றாலும்
உன்னைத் தேடுகின்றோம்! காணவில்லை!
நினைவலைகள் வந்து சென்றாலும்
நீ ஒலித்த மொழிகளில் ஓசை
இன்றும் எம்மைவிட்டுப் போகவில்லை!
உன்னை எண்ணி வாழும் இந்த உள்ளங்கள்
கண்ணீர் வடிக்கும் ஈரவிழிகள்தான்..........

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார், தம்பி, தங்கை உற்றார், உறவினர்.

*புலோப்பளை கிழக்கு, பளை.* (17463)

## சாவகச்சேரியில் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி

தென்மராட்சி,மே5

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் யாழ்.சமூக நலநோம்பு நிலையத்தினர் (JAFFNA SOCIAL ACTION CENTRE) சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகளுக்கு இலவச தையல் மற்றும் கேக் ஐசிங் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

சாவகச்சேரி, கச்சாய் வீதி வீரபத்திர கோயிலுக்கு அருகில் உள்ள கட்டடத்தில் இன்று திங்கட்கிழமை 26 யுவதிகளுக்கு இந்தப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனத்தினரால் கடந்த வாரம் கச்சாய் அம்மன் கோயிலுக்கு அருகில் தும்பு பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் கனகரெத்தினம் ரவீந்திரன்

(கணனிப் பொறியியலாளர் - நோர்வே)

மலர்வு 22.01.1952 — உதிர்வு 05.04.2003.

**திதி : 05.05.2003**

*கடலில் உதித்த முத்துப்போல் எங்கள் குலம்
காக்க வந்த தலைமகனே! அன்பின் திரு உருவாய்
பாசத்தின் உறைவிடமாய் எல்லா உள்ளங்களையும்
கொள்ளைகொண்ட அன்பு நெஞ்சமே! உமது பிரிவை
எண்ணி ஆறாத் துயரில் மூழ்கி இருக்கும் அன்பு உள்ளங்கள்!*

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறிய உள்ளங்களுக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*தகவல்:*
திருமதி
குகதாசன் சற்குணவதி
(சகோதரி)

*28, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (17447)


# நவீன முறையில் எலக்ரோ பிளேட்டிங்

யாழ்.மண்ணில் இப்போது முதற்றடவையாக

## கே.வி.எஸ். எலக்ரோ பிளேட்டிங்

★ சகல மோட்டார் சைக்கிள்களினதும் உதிரிப்பாகங்கள்
★ வாகனங்களின் உதிரிப்பாகங்கள்
★ கோயில் கொடித்தம்பம் உட்பட
சகல உலோக வீட்டுத் தளபாடங்கள்

அனைத்தும் தரமான முறையில் உத்தரவாதத்துடன் பிளேட்டிங்

நிக்கல் முலாம் செய்து கொள்வதற்கு

## கே.வி.எஸ். ஹாட்வெயர்ஸ்

இல.123, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-27674)



# லிபேட்டி திரையரங்கு

## அச்சுவேலி





என்றும் அன்புடைய
வடமராட்சி, தென்மராட்சி சினிமா ரசிகர்கள்,
ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருமே
எமது அச்சுவேலி லிபேட்டி திரையரங்குக்கு
மகத்தான ஆதரவு தந்தீர்கள். நன்றி!
இதனை எங்களால் மறக்கவே முடியாது!

அன்பானவர்களே!

இப்பொழுது எங்கள் திரையரங்கு புனரமைக்கப்பட்டு அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனத்தோடு இணைந்து நல்ல நல்ல திரைப்படங்களை றீல்ஸ்(Reels) முறையில் திரையிடுகின்றோம். இதற்கு மேலும் உங்கள் பரிபூரணமான ஆதரவைத் தரும்படி அன்பாக வேண்டுகின்றோம்.




## இன்று முதல்

விஜய், ஸ்நேகா நடித்த

## வசீகரா...



(றீல்ஸ்)

காட்சி நேரம் : 11.00, 3.00 7.00
(புதிய நேரம்)

எமது திரைப்பட விளம்பரங்கள் யாவும் தினசரி 'உதயன்' நாளிதழில் வெளிவரும்

(17475)

# உதயன்

## சட்ட அங்கீகாரம் இல்லாத உயர் பாதுகாப்பு வலயங்கள்

தற்போது பெரிதும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து சில விடயங்களை எழுத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒருவருட காலத்திற்கு மேலாகிவிட்டது. எனினும், யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் குடிசனப் பரதேசங்களை இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் நிலைமை தொடர்ந்து நீடிக்கின்றது. மக்கள் அப்பிரதேசங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படுகிறார்கள் இல்லை. இதனை ஆட்சேபித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் நானூறுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விளக்கமளிக்குமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம், யாழ். மாவட்டப் படைகளின் தளபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. அதற்கு அவர் பதிலளித்திருக்கின்றார். அந்தப் பதிலிலேயே சில விடயங்களை அவர் எழுத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

★ உயர்பாதுகாப்பு வலயம் என்பது வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படவில்லை.

★ மாறாக, அமைச்சரவை அனுமதியுடன் 1993ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் திகதியன்று பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அது உருவாக்கப்பட்டு, இராணுவத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கட்டளைச் சட்டத்தின் கீழேயே பயங்கரவாதத் தடைச்சட்டம் இருந்து வந்தது. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் கூறப்பட்டதற்கு இணங்க - ஜனாதிபதியின் உத்தரவிற்கேற்ப - படையினர் தமது பாதுகாப்பிற்காகத் தாங்கள் விரும்பிய இடங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பகுதிக்குள் உள்ளடக்கமுடியும்.

- இப்படி எழுத்தில் தெரிவித்திருக்கின்றார் வட பகுதித் தளபதி.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு எதிராக உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இழைக்கப்படும் கொடுமை கொடூரமானது. சட்ட அதிகாரம் ஏதுமின்றி அரசுப் படைகள் இந்தக் கொடூரத்தைப் புரிந்து வருகின்றன. தமிழர் நலன் பேணவேண்டிய சட்ட ஆர்வலர்கள் நீதிமன்றத்தை நாடி இது விடயத்தில் உரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கமுடியும் என இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்தோம். அதை உறுதிப்படுத்தும் வகையில் வடபகுதிக் கட்டளைத் தளபதியின் எழுத்து மூலப் பதில் அமைந்திருக்கின்றது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் ஏற்படுத்தப்படுவது, இப்போது அவசரகாலச் சட்டம் காலாவதியாகி பல காலமாகிவிட்டது. எனவே, உயர் பாதுகாப்பு வலயத்துக்கு பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சட்ட அங்கீகாரம் பெறும் முயற்சி வாய்க்காது. நிச்சயம் அது தோற்றுப்போகும்.

ஆனாலும், தற்போது நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குச் சட்ட அங்கீகாரம்பெற அரசுத் தரப்பு முயலலாம்.

அதிலும் கூட அரசுக்கு நெருக்கடி - சிக்கல் - உண்டு.

சட்டவிரோதமாக ஆயுதங்கள் தயாரிக்கப்படுதல், நாட்டுக்கு எதிரான சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெறுதல் போன்ற - பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 'சட்டவிரோதச் செயல்' என்று வர்ணிக்கப்படுகின்ற - ஏதேனும் நடவடிக்கைகள் ஒரு பிரதேசத்தில் இடம்பெறுவதாக அரசு சந்தேகித்தால், அதனைத் தடுக்கும் நோக்குடன் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் அத்தகைய பிரதேசத்தைப் 'பாதுகாப்புப் பிரதேசமாக' அரசு அறிவிக்கமுடியும். அதற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வகை செய்கின்றது.

ஆனால், அத்தகைய வர்த்தமானி அறிவித்தல் ஏதும் வெளியிடப்படவில்லை. அத்தகைய வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தற்போதைய உயர் பாதுகாப்பு வலயங்கள் பேணப்படவில்லை என்பதை வடபகுதிக் கட்டளைத் தளபதி எழுத்து மூலம் ஒப்புக்கொண்டுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு சட்ட அந்தஸ்து வழங்க அவர் நாடும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டமோ இப்போது காலாவதியாகி விட்டது.

எனவே, உயர் பாதுகாப்பு வலயங்கள் சட்ட அங்கீகாரம் பெறாதவை. அதனைக் காட்டி மக்களின் உரிமைகளைப் பறிக்க முடியாது என்று நீதிமன்றங்களைக் கொண்டு அறிவிக்கச் செய்ய நல்ல வாய்ப்பு - சந்தர்ப்பம் - ஏற்பட்டுள்ளது.

தங்களின் சட்டத் தகைமையை அரசியலுக்கு லாவகமாகப் பயன்படுத்தும் நமது சட்ட ஆர்வலர்கள், இது விடயத்தில் தமது சட்ட அறிவை சற்று செலவழித்து தமழர்களுக்கு சட்டரீதியாக நியாயம் வேண்டிக் கொடுக்க முயற்சிப்பார்களா?

# இந்து மாநாட்டை கொண்டாடுவோருக்கு நிதியுதவி வழங்கலில் முன்னுரிமை!

## அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு

வலி.தெற்கு,மே5

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு ஆலயங்களில் சைவப் பெருமக்கள் எவ்வளவுதூரம் உற்சாகத்துடன் பங்கேற்கிறார்கள் என்பதை கவனித்தே, எதிர்காலத்தில் ஆலயங்களுக்கும் இந்து சமய நிறுவனங்களுக்குமான எமது உதவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

சிறப்பாகச் செயற்படும் ஆலயங்கள் மற்றும் இந்துசமய நிறுவனங்களுக்கு தமது அமைச்சினால் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படும் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

இந்து சமயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நிகழ்வுகள் இந்து சமயத்திற்கும், இந்து கலாசாரத்திற்கும் பெருமை சேர்ப்பதுடன், இளைய தலைமுறையினருக்கு இந்து சமயத்தில் அதிக பற்றையும் உணர்வையும் ஏற்படுத்தும்.

எனவே, ஆலயங்கள், சமய நிறுவனங்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்து சமயத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டும்.

இம்மாநாட்டை முன்னிட்டு ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் சைவப் பெருமக்கள் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதைக் குறிப்பிட்டு, அவற்றை விளக்கும் புகைப்படப் பிரதிகளையும் இணைத்து அறிக்கை ஒன்று தயாரிக்கப்படல்வேண்டும். அதனை கிராம அலுவலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் உறுதிப்படுத்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கவேண்டும் - இவ்வாறு அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆலயங்கள், சமய நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார்.

இவ்வறிக்கைகளை அடிப்படையாக வைத்தே ஆலயங்களின் வளர்ச்சிக்கும், இந்து சமய நிறுவன வளர்ச்சிக்குமென எம்மால் வழங்கப்படும் உதவிகளுக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் - அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(எ-152)

# களுத்துறைச் சிறைச்சாலைக்கு சிங்களக் கைதிகளை மாற்றாதீர்!

## அங்குள்ள தமிழர்கள் வேண்டுகோள்

கொழும்பு,மே5

வேறு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிங்களக் கைதிகளை களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றும் நடவடிக்கையைக் கைவிடுமாறு களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகள் சிறைச்சாலை ஆணையாளரிடம் கோரியுள்ளனர்.

களுத்துறைச் சிறையில் 1997 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் நடத்திய தாக்குதலில் மூன்று தமிழ்க் கைதிகளும் - 2000 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு தமிழ்க் கைதிகளும் - கொல்லப்பட்டதை தமிழ் அரசியல் கைதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிங்களக் கைதிகள் வேறு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் களுத்துறைச் சிறையில் எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்பதையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சிங்களக் கைதிகள் மீண்டும் களுத்துறைச் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்படவிருப்பது தமக்கு அச்சத்தையும், அதிர்ச்சியையும் தருவதாக உள்ளது எனவும் -

தம்மை விடுதலை செய்த பின்னரோ அல்லது சொந்த மாவட்டங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றிய பின்னரோ சிங்களக் கைதிகளை களுத்துறைச் சிறைச்சாலைக்குக் கொண்டு வரலாம் என்றும் -

அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-12)

# அமெ.உதவி வெளிநாட்டமைச்சர் 12ஆம் திகதி இலங்கை வருகிறார்

கொழும்பு,மே5

அமெரிக்காவின் ஆசியப் பிராந்தியத்துக்கான உதவி வெளிநாட்டமைச்சர் கிறிஸ்ரீனா றொக்கா இம்மாதம் 12ஆம் திகதி இலங்கை வர இருக்கிறார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணம் ஒன்றினை மேற்கொண்டு வரும் றொக்கா, அதன் ஒரு பகுதியாக இலங்கைக்கும் வருகிறார். இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் முதலான நாடுகளுக்கும் அவர் செல்லவுள்ளார்.

இலங்கைக்கு வரும்போது பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களைச் சந்தித்து சமாதான முயற்சிகள் பற்றிப் பேசுவார். இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவினை வலுப்படுத்தும் வகையிலான கூட்டம் ஒன்றிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

கிறிஸ்ரீனா றொக்கா கடந்த ஆண்டும் இலங்கை வந்திருந்தார். அப்போது பிரதமரைச் சந்திப்பதற்காக அவர் யாழ்ப்பாணம் வந்ததும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க பிரதி வெளிநாட்டமைச்சர் ஆர்மிடேஜ்ஜும் இங்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-12)

# புகையிலையை உலர வைத்து பதப்படுத்துமாறு கோரிக்கை

## கமநல உதவிப்பணிப்பாளர் விடுத்தார்

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.மாவட்டத்தில் புகையிலைச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அவற்றை வெட்டி, உலரவைத்துப் பதப்படுத்தி வைக்கவேண்டுமென கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்முறை பச்சைப் புகையிலையைக் கொள்வனவு செய்வதற்கு எவரும் பெரியளவில் முன்வராத காரணத்தினால் பல விவசாயிகள் தோட்டங்களிலேயே அவற்றை உரிய கவனிப்பின்றி விட்டுள்ளனர் என்றும் -

இதனால் அவர்கள் தாம் செலவழித்த பணத்தைக் கூடப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்றும் -அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன் காரணமாக விவசாயிகள் எவரும் புகையிலையைத் தோட்டங்களில் விடவேண்டாம், அவற்றை உலர்த்திப் பதப்படுத்தி வைத்தால் எதிர்காலத்தில் அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்யக்கூடிய நிலை உருவாகும் என்றும் -அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கடந்த சில தினங்களாகப் பெய்து வருகின்ற மழை காரணமாக புகையிலையை வெட்டி உலர்த்துகின்ற விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-10)

### நாளை

சித்திரை 23
செவ்வாய்க்கிழமை
06.05.2003
திதி : பஞ்சமி
பின்னிரவு 1.16 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
முன்னிரவு 9.32 வரை
சுபநேரம் : 10.26-11.56
ராகுகாலம் : 2.56-4.26
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன்னம்பிக்கைமிக்க சிலரின் வரலாறே உலக சரித்திரம் ஆகிறது.

# நாவாந்துறை கோஷ்டி மோதல் புலிகளின் தலையீட்டால் முடிந்தது!

நாவந்துறையில் இரு பகுதியினாிடையே நடைபெற்று வந்த கோஷ்டி மோதல் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரின் தலையீட்டால் சமாதானமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.

நாவாந்துறை பங்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பங்குதந்தை வண.பிதா பீற்றர் துரைரத்தினம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் சமாதான முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர், பொலீஸ், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மோதலில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரினதும் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இரண்டு தரப்பினரையும் சமாதானப்படுத்தியதோடு எதிர்காலத்தில் இதுபோன்ற மோதல்களில் ஈடுபடவேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது. (ஒ-17)

## அச்செழுவின் பல பகுதிகளிலும்

# கால்நடைகளைக் கடித்துக் குதறும் கட்டாக்காலி நாய்கள்

அச்செழுப்பகுதியில் கட்டாக்காலி நாய்களினால் கால்நடைகள் கடித்துக் குதறப்படுவதாக கால்நடை வளர்ப்போர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அசசெழு நரசிங்க வைரவர் கோயிலடி சனசமூக நிலையப் பகுதி, சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகிய பகுதிகளில் கட்டாக் காலிநாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும்-

கடந்த வாரத்தில் மட்டும் அச்செழுப்பகுதியில் 10இற்கு மேற்பட்ட ஆடுகள் கடித்துக் குதறப்பட்டிருப்பதாக கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களினால் கடித்துக் குதறப்பட்ட ஆடுகளில் சில உரிய நேரத்தில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதால் காப்பாற்றப்பட்டதாகவும் -

இன்னும் சிலவற்றை காப்பாற்ற முடியாமற்போய்விட்டதாகவும் -

கோப்பாய்ப்பிரிவு கால்நடை அபிவிருத்தி விரிவாக்க உத்தியோகத்தர் சத்தியவாகேஸ்வரன் தெரிவித்தார்.

கட்டாக்காலி நாய்களின் பெரும்பாலானவை பாதுகாப்புப் படையினரின் காவல் நிலைகளை சூழவுள்ள பகுதியில் சுதந்திரமாக நடமாடி அட்டகாசம் செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (எ-11)

# சுன்னாகம் யுவதி வல்லுறவு; 2 நபர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மே5

சுன்னாகத்தில் மனநலம் குன்றிய யுவதியைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள இருவரையும் எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி பொதுமக்களால் பிடித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்ட இருவரையும் புலிகள் சுன்னாகம் பொலீஸாரிடம் கையளித்தனர்.

இருவரையும் விசாரணை செய்த பொலீஸார் அவர்களை மல்லாகம் நீதிவான் முன் கடந்த வெள்ளியன்று ஆஜர் செய்தனர்.

இருவரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி தெரிவித்த நீதிவான், பொதுமக்களின் தாக்குதல் காரணமாக காயங்களுக்குள்ளான இருவரையும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். (ம-3)

# வடக்கு - கிழக்கு மாகாண சபை (வ.கி.மா.ச.)

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு. வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டச் செலவுகளுக்கென நிதியினை ஒதுக்கியுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இவ்வொதுக்கீட்டின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில் தருநராக குறிப்பிடப்படும் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

## அட்டவணை

| இல. | ஒப்பந்த இனங் / காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | ஆக்குறைந்த (ICTAD) பதிவு நீர்ப்பாசனமும் வடிகால் அமைப்பு துறையில் | கூறுவிலை ஆவணங்களை வழங்கப்படும் முன் கூட்டிய கூறுவிலை கூட்டம் நிகழும் அலுவலகங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | DDI/IRR/BAT /2003/01 | மியான்கல் குளத்தினை புனரமைத்தல் | 620,000 | 2,000 | M4 | மா/பி.நீ.ப.பணிமனை யாட் றோட், மட்டக்களப்பு தொ.பே. - 065-24318 |
| 02. | DDI/IRR/VAV /2003/01 | கல்மடுகுளத்தினை புனரமைத்தல் (பகுதி -1) பொதி-1 தலைமைக் கட்டமைப்புக்கள் | 120,000 | 1,000 | M6 | மா/பி.நீ.ப.பணிமனை புகையிரதவீதி, வவுனியா தொ.பே. - 024-22347 |
| 03. | DDI/IRR/VAV /2003/02 | கல்மடுகுளத்தினை புனரமைத்தல் (பகுதி -1) பொதி -2 பிரதான வாய்க்கால் | 75,000 | 1,000 | M7 | மா/பி.நீ.ப.பணிமனை புகையிரதவீதி, வவுனியா தொ.பே. - 024-22347 |
| 04. | DDI/IRR/VAV /2003/03 | கல்மடுகுளத்தினை புனரமைத்தல் (பகுதி -1) பொதி - 3 விநியோக வாய்க்கால் | 75,000 | 1,000 | M7 | மா/பி.நீ.ப.பணிமனை புகையிரதவீதி, வவுனியா தொ.பே. - 024-22347 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரல் ஒன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

VI. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

4. இதன் தொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கூறுவிலையிடமுடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கூறுவிலையாக அமையவேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை இத்திட்டத்தின்கீழ் மூன்றாக விளங்கும்.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோர் மேலதிக தகவல்களை கூறுவிலைப் படிவத்தில் பெறமுடியும் என்பதுடன், கூறுவிலை ஆவணங்களை பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் பார்வையிடலாம்.
6. கூறுவிலை ஆவணங்களை 2003 மே 5ஆம் திகதியில் இருந்து 2003 மே 22ஆம் திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3வரை வேலை நாள்களில் இது தொடர்பாக பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களிலிருந்து பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் செலுத்தலின் பேரில் கொள்வனவு செய்யப்படலாம். கூறுவிலை ஆவணங்கள் வியாபாரத் தலைப்புடன் கூடிய கடிதம் மூலமாக கோரப்படில் மட்டுமே வழங்கப்படும்.
7. கூறுவிலையிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கூறுவிலையையும் கூறுவிலை கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 9இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கேற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. கூறுவிலையானது அது திறக்கப்படும் தினத்திலிருந்து 91 தினங்களுக்கு வலுவுடையதாக இருக்கும். கூறுவிலை திறக்கப்படும் தினத்திலிருந்து 119 நாள்களுக்கு வலுவுடையதாக இருக்கும் வண்ணம் கூறுவிலைப் பிணை கூறுவிலையுடன் இணைக்கப்படவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கூறுவிலைப் பிணைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
9. *வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதம செயலாளர் அலுவலகம், உட்துறைமுக வீதி, திருகோணமலை* என்ற விலாசத்தில் கிடைக்கும் வண்ணம் பொருத்தமான கூறுவிலைப்பிணை இணைக்கப்பட்ட பொறிவைத்த கூறுவிலைகள் 2003 மே 22 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு முன்னதாக சேர்ப்பிக்கப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கூறுவிலைகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
10. முன்கூட்டியே கூறுவிலைக் கூட்டம் ஒன்று இது தொடர்பாக பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் 2003 மே 12ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.
11. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**பிரதம செயலாளர்,**

**பிரதம செயலாளர் செயலகம்,**

**வடக்கு - கிழக்கு மாகாண சபை, திருகோணமலை.**

(சி-27686)

# கத்திவெட்டுத் தொடர்பாக ஒருவர் கைது!

யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றதாகக் கூறப்படும் கத்தி வெட்டுச் சம்பவம் தொடர்பாக ஒருவரை யாழ். பொலீஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட யாழ். மடத்தடியைச் சேர்ந்த மரியதாஸ் இரதாஸ் என்பவர் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்றுமுன்தினம் மாலை ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தில் வெட்டுக் காயத்துக்கு இலக்கான சுதுமலையைச் சேர்ந்த தங்கவேலு தங்கவதனன் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் மூவரைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (ம-3)

## சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன்

## அறிவித்தல்

ஆள் குறைப்பு சம்பந்தமாக விசேட கலந்துரையாடல்

காலம்: 07.05.2003 புதன்கிழமை காலை 9.00மணி

இடம்: யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம்

ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபன நிர்வாகத்தினால் கடிதம் வழங்கப்பட்ட அனைவரும் தவறாது சமுகந்தரவும்.

தலைவர். (17462) செயலாளர்.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 - 07 - 1938



உதிர்வு 27 - 04 - 2001

## திருமதி

## சபாரத்தினம் இராசாத்தியம்மா

திதி: சதுர்த்தி 05.05.2003

*அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே!*
*எங்கள் வாழ்வின் வழிகாட்டியே!*
*தந்தையாய் தெய்வமாய் அரவணைத்து*
*உங்கள் நலன்பாராமல் நாங்கள் சிறும்*
*சிறப்புடன் வாழ வழிவகுத்த அன்புத்தாயே!*
*நீங்கள் எம்மைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும்*
*உங்கள் அன்புமுகமும் பசுமையான நினைவுகளும்*
*எம்மை விட்டு ஒருபோதும் அகலாது.*

தற்காலிக முகவரி:
*12, பெரிய தம்பிரான் கோயில் வீதி, வண்.மேற்கு, யாழ்ப்பாணம்.* (17492)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணுலகு 12 - 11 - 1926



விண்ணுலகு 05 - 04 - 2003

## அமரர்

## சின்னத்தம்பி ஏகாம்பரம்

*(நிறுவுநர் பரமேஸ்வரஸ்ஸ்)*

திதி: நிர்ணய வெண்பா

ஆண்டு சித்திரபானு ஆகுதிங்கள் பங்குனி
பூண்ட திதி பூர்வதிருதியை – ஈண்டுருவி
சின்னத்தம்பி ஏகாம்பரம் சிவனார் திருவடி
சிக்கெனப் பற்றினார் காண்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலமும் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நேரில் வருகை தந்தும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் அன்பு உள்ளங்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*199, பிரதான வீதி, திருகோணமலை.*

திருமதி ஏகாம்பரம் செல்லப்பாக்கியம்.

(சி-27671)

# கிராமப்புற மக்களின் குறைகளை நிறைவு செய்வதே முக்கிய பணி!

## சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே5

நகரங்களை விட பின்தங்கிய கிராம மக்களது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே எமது பிரதான நோக்கம்.

- இவ்வாறு தும்பளை தெற்கு தமிழொலி மாணவர் மன்ற 12ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி விழா, மன்றத்தின் போஷகர் வ.மார்க்கண்டு தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:-

தேர்தல் பிரசார காலத்தில் நடைபெற்ற வன்செயலினால் காயமடைந்த நான், இப்பகுதிக்கு வந்து மக்களைச் சந்திக்க முடியவில்லை.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இப்பகுதியில் மின்சாரவசதி, வீதித் திருத்தம், மலசலகூட அமைப்பு போன்ற அபிவிருத்திகளை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை தேவைப்படும் இடங்களுக்கு மின் இணைப்பு வழங்க ஒரு கோடி ரூபா எனக்கு ஒதுக்கித்தருமாறு மின்வலு அமைச்சரைக் கேட்டுள்ளேன். இந்த நிதி கிடைத்ததும் அதில் ஒரு பகுதியை இக்கிராமத்துக்குப் பயன்படுத்துவேன்.

யுத்த சூழலில் அவஸ்தைப்பட்ட நாம், தற்பொழுது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் விறுநடை போடுகின்றோம். இந்நிலையில், உலக வங்கியால் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'சிரான்' அமைப்பின் ஊடாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளில் வந்துசேரவிருக்கும் நிதி உதவியிலிருந்து கிராம மக்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குவதே எமது கொள்கையாகும் - என்றார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தும்பளை கிராம சேவை அலுவலர் எஸ்.வசந்தகுமார், வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியன், பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் பி. அன்ரனி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

(எ)

# ஏனையோரைவிட மீனவர்களுக்கே கடவுள் நம்பிக்கை அதிகம் உண்டு!

## குருநகர் உதவிப் பங்குத் தந்தை உரை

குருநகர்,மே5

மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு கடலுக்குச் சென்றுவரும் மீனவர்கள் ஏனைய தொழிலாளர்களை விட இறைவன் மீது அதீத நம்பிக்கையுடையவர்களாகவே உள்ளனர்.

தொழிலாளர் தினமான கடந்த முதலாம் திகதி குருநகர் இறங்கு துறையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் மீனவர்களுக்காக திருப்பலியை நிறைவேற்றிய குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை வண.பிதா க.அருட்செல்வன் அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருப்பலியின்போது வணபிதா மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய தொழிலை மேற்கொள்பவர்கள் தரையிலேயே தமது தொழிலை மேற்கொள்கிறார்கள். ஆனால், மீனவர்கள் கடலிலேயே தமது தொழிலை மேற்கொள்ளச் செல்கிறார்கள்.

ஒவ்வொரு தடவையும் கடலில் தமது காலடியை வைக்கும்போது மீளவும் திரும்பித் தாம் தரைக்கு வருவோமா? என்ற சந்தேகத்துடன் இறைவனை பிரார்த்தித்துக் கொண்டே இவர்கள் கடலுக்குச் செல்கிறார்கள்.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் உண்மை, அன்பு, நேர்மை, விசுவாசம் உடையவர்களாக நடக்க வேண்டும். மீன்பிடிப்பவர்களில் ஒருசிலர் மற்றவர்களது மீன் மற்றும் உபகரணங்களைத் திருடுகிறார்கள் எனக் கேள்விப்படுகிறோம். இது எல்லாஇடத்திலும் நடைபெற்றுவருகிறது. இச்செயலை விட்டு நாம் மற்றவர்களிடம் அன்பு, நேர்மை, உண்மை உள்ளவர்களாக இருத்தல்வேண்டும்.

முதலாளிகள், அதாவது சம்மாட்டிமார் தமக்குக் கீழ் தொழில் செய்யும் தொழிலாளர்களது கொடுப்பனவுகளை நேர்மையாகவும், சரியாகவும் வழங்க வேண்டும். அப்போதுதான் அவனது தொழில் சிறக்கும்.

தொழிலை ஆசீர்வதித்தால் மட்டும் தொழில் சிறப்பாக நடக்கும் என்பதல்ல. ஆசீர்வதித்த பின்னர் தொழில் சரியாக நடைபெறாது கூடப்போகலாம். நாம் எமது மனச்சாட்சியின்படி நடக்கவேண்டும்.

1886ஆம் ஆண்டு தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நடத்திய உரிமைப் போரின் பின்னரே மேதினம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டு வருகிறது. இப்போராட்டத்தின்போது நான்கு தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள். எமது மீனவர்களும் எதுவித தடைகளுமின்றி சுதந்திரமாகத் தமது தொழிலைச் செய்யும் சூழ்நிலை உருவாகவேண்டும் - என்றார்.

(எ-51)

### அரியாலைப் பகுதிகளிலும்

# சேதமடைந்த வீடுகளை மதிப்பிடும் பணி ஆரம்பம்

வலி.வடக்கு,மே5

அரியாலை பகுதி கிராம அலுவலர் பிரிவுகளில் உடைந்த - சேதமடைந்த - வீடுகளை மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழன் முதல் ஆரம்பமாகியுள்ள இப்பணியில் யாழ்.செயலக பொறியியலாளர் தலைமையில் பிரதேச செயலக, பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற அரியாலை பகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு சம்பந்தமான கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது.

மேற்படி விவரம் திரட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளின் விவரங்களையும் உள்ளடக்குமாறு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் அமைப்புக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

(எ-86)

### ஐயப்பன் ஆலயத்தில் விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே5

- கோண்டாவில் கிழக்கு சபரீஸ ஐயப்பன் ஆலயத்தில் 2ஆவது உலக இந்துமாநாட்டை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு விசேட பூசை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 7.30 மணிக்கு நாதஸ்வரக் கச்சேரியும் மாலை 8 மணிக்கு பாரதியார் கழகத்தினர் வழங்கும் "பெண்மை ஆற்றலில் பெரிதும் போற்றப்படுபவள் கண்ணகியா? சீதையா?" என்ற தலைப்பிலான பட்டி மன்றமும் இடம்பெறும்.

### உயர் மட்டப் பதவிப் போட்டியால்

# கல்முனை வலயக் கல்வி அலுவலக நிர்வாகம் நாற்றமடிப்பதாகப் புகார்

சாய்ந்தமருது,மே5

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் உயர் மட்ட அதிகாரிகள் சிலரிடையே ஏற்பட்டுள்ள பதவிப் போட்டி, அதிகார இழுபறி, கழுத்தறுப்பு போன்ற நடவடிக்கைகளால் அலுவலக நிர்வாகம் சீர்கெட்டு நாறத் தொடங்கிவிட்டது. அதனால், பாடசாலைகள் மீது போதிய கண்காணிப்பு இல்லை. அதன் விளைவு மாணவர்களின் கல்வி பாதிப்பு என்று புகார் கூறப்படுகிறது.

இந்த அவல நிலை பற்றி பெற்றோரும் பொதுநல அமைப்புகளும் கடமையுணர்வுமிக்க அதிபர்களும் ஆசிரியர்களும் கூட வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு எடுத்துக் கூறியும் கவனிப்பார் இல்லை. மாகாணக் கல்வி அமைச்சு குறைபாடுகள் எதையும் கண்டுகொள்வதாகவோ, சொல்வதைக் கேட்டு செயலில் இறங்குவதாகவோ இல்லை. ஏனோதானோ என்று தன்பாட்டில் இருக்கிறதே என்று பலரும் குறைபட்டுக்கொள்கிறார்கள்.

கட்சி அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லமுனையும் சில அதிகாரிகளே கல்முனை வலயக் கல்வி அலுவலகச் சீர்கேட்டுக்கு முக்கிய காரணகர்த்தர்கள் என்று கூறப்படுகிறது.

இந்த அலுவலக உயர் அதிகாரிகள் சிலர் அலுவலகத்தில் இருந்து பாடசாலைகளைக் கண்காணித்தல், நிர்வகித்தல் போன்ற கடமைகளை புறந்தள்ளிவிட்டு வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்படுகிறது. அவர்கள் அலுவலகத்தில் இருக்கும் நாள்களைவிட வெளியில் இருக்கும் நாள்களே அதிகம் என்றும் கணக்குக் காட்டப்படுகிறது.

உயர் பதவி ஒன்றில் கண்வைத்து அந்தப் பதவியில் இப்போது உள்ளவரை இடமாற்றம் செய்வதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற செய்தியும் அலுவலகத்திலிருந்து கசிந்திருக்கிறது.

இதுதொடர்பாக வால்பிடி எழுதுவினைஞர் ஒருவர் கையெழுத்து வேட்டையில் இறங்கியிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

58 தமிழ், முஸ்லிம் பாடசாலைகள், 3 தேசியப் பாடசாலைகள், 5 கோட்டக் கல்வி அலுவலகங்கள் 1,475 ஆசிரியர்கள், 37,101 மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய பெரிய கல்முனை வலயக் கல்வி அலுவலகம் இப்படிச் சீரழிவது அனைவரையும் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

### தியாகி திலீபன் மருத்துவமனைக்கு புதிய கட்டடம்

ஆழியவளையில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்காக காணி தெரிவுசெய்யப்பட்டு, பொதுமக்களால் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், அருணோதயா விளையாட்டுக் கழகம், சக்திவேல் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் மேற்படி காணியினை சிரமதானம்மூலம் துப்புரவு செய்துள்ளனர்.

தற்போது தியாக தீபம் திலீபன் மருத்துவமனை ஆழியவளையில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

(எ-182)

### சமுர்த்தி வங்கிக்கு நிரந்தரக் கட்டடம்

மருதங்கேணியில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைப்பதற்கென 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அங்கு திறக்கப்பட்ட சமுர்த்தி வங்கி தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகின்றது.

## கல்விச்சாலைக் காட்சிகள்



கோப்பாய் மகா வித்தியாலயத்தில் வை.சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட கணனி அறைத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட பிரதம, சிறப்பு விருந்தினர்களை மாணவிகள் வரவேற்று, இன்னிசை இசைப்பதைப் படத்தில் காணலாம்.

(எ-180)



பிரான்பற்று கலைமகள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் வே.சிவசுந்தரம், வலிகாமம் வலய கணக்காளர் ந.யோகேந்திரராஜா ஆகியோர் காணப்படுகின்றனர்.

(எ-90)



வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிஷன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் பொ.சிவராசா, வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

(எ-173)



யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜி.ரி.இசற் இன் கட்டடக் கலைஞரும் இணைப்பாளருமான றாவ் வில்கம் ஸ்ரோர், அதிபர் து.நடராசலிங்கத்தினால் திலகமிடப்பட்டு வரவேற்கப்படுகிறார். அருகில் பாடசாலையின் ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள்.

(எ-51)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## யாழ்ப்பாணமா? கொழும்பா?

வானொலியில் இந்த நாடகத்தைக் கேட்டீர்களா? கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய இந்த நூலை வாங்கி வாசியுங்கள். எங்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற 7 நாடகங்கள் கொண்டது. ரூபா50 மட்டுமே. (17500)

## தவறிவிட்டது

மாதகலைச் சேர்ந்த கா.அழகரத்தினம் என்பவருடைய தே.அ.அ. (இல.422680128V), மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கறுப்புப் பையுடன் பண்டத்தரிப்பிற்கும் சுழிபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் டிலக்ஸ் சலூன், சித்தன்கேணிச் சந்தி அல்லது பிள்ளையார் கோயிலடி, மாதகலில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (17528)

அத்தாய், பூநகரியைச் சேர்ந்த ஆறுமுகம் மனோகரன் என்பவரின் தேசிய அ.அ.(இல.693431352V) திலீபன் தூபி சுற்றாடலுக்கும் கோயில் வீதி, முடமாவடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர் அல்லது 33, கன்னாதிட்டி வீதி, பிரணகா நகைத் தொழிலகத்தில் ஒப்படைத்துதவவும். (17525)

## மணமகள் தேவை

1972, கார்த்திகை 1இல் செவ்வாய் (M.Sc., London) Delaruf Plo (Lanka) Security, Currency printers Joint venture Central Bank, Colombo இல் (Salary SLR 80,000/-) உயர் உத்தியோக மணமகனுக்கு அழகான மணப்பெண் (Professional தரத்தில்) தேவை. தொடர்பு: துரை விமலா, இலகு திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(17396)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 09.11.1959இல் பிறந்த, சதயம், 4ஆம் பாதம், கடைாவில் நிரந்தர தொழில் புரியும் சைவ போசன மணமகனுக்கு படித்த, அழகிய, சைவ போசன மணமகள் தேவை. திருமணத்தின் பின் சைவ போசனமாக இருக்க விரும்புபவர்களும் புகைப் படத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1876, மே/பா. உதயன். (17516)

யாழ்.இந்து, கௌரவ குடும்பம், வயது 39, 5அடி 8 அங்குல உயரமுள்ள ஜேர்மனில் தொழில் புரியும் பிரஜாவுரிமை உள்ள அழகிய, படித்த மணமகனுக்கு ஏற்ற குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுக்கு உட்பட்ட, 5 அடிக்கு மேல் உயரம் கொண்ட, படித்த, மெல்லிய, அழகான மணமகள் தேவை. சாதகம் இயலுமானால் படத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1877, மே/பா. உதயன். (17538)

## காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, நாச்சிமார் வீதியில் 7 பரப்புக் காணி, நல்ல தண்ணீர் கிணற்றுடன், வீடு கட்டி குறையிலுள்ள நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ஜெயசீலன், கற்பகதரு, தாவடிச் சந்தி. காலை 9.30 மணிக்கு முன்னர் சந்திக்கலாம். (17469)

## கடைகள் விற்பனைக்கு

பருத்தித்துறை ரவுனை அண்டிய பகுதியில் 5 கடைகளுடன் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சுறமணன், "மணியம் வோச் வேக்ஸ்", பிரதான வீதி, பருத்தித்துறை.(17537)

## வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாண நகரப் பகுதியில் குளியலறை, மின்சார வசதிகளுடன் கூடிய ஓர் அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு: சி.இந்திரகுமார், சென். ஆன்ஸ் லேன், மானிப்பாய். (17494)

## சீருடைக்கூப்பன் விநியோகம்

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக் கூப்பன்கள் நாளைமறுதினம் புதன் கிழமை காலை 9.00மணிமுதல் பிரதேச செயலகத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதால் அன்றைய தினம் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் தமது தேசிய அடைய அட்டையுடன் வந்து சீருடைக் கூப்பன் களைப் பெற்றுக்கொள்ளும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஓ)

---

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




## செல்வன் கலாவண்ணன் கோபி

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த **திரு.திருமதி கலாவண்ணன் கோகிலா** (உரும்பிராய்) தம்பதிகளின் செல்வப் புதல்வன் **கோபி** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (05-05-03) திங்கட்கிழமை லண்டனில் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, லண்டனில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா குடும்பம், மாமிமார் குடும்பங்கள், நோர்வேயில் உள்ள பெரியப்பா குடும்பம், உரும்பிராயில் உள்ள தாத்தா, அம்மம்மா, மாமாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் எல்லாம்வல்ல தெய்வ ஆசியைப் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்புடனும் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்:
தாத்தா, அம்மம்மா,
மாமன்மார்.

*"அன்னை இல்லம்"*
*உரும்பிராய் கிழக்கு.* (17502)

---

# மலிவு விலையில் அறிவு நூல்கள்

ஆத்மஜோதி முத்தையாவின் பிரார்த்தனை மாலை மற்றும் மாரியம்மன் தாலாட்டு உட்பட அரிய பக்தி நூல்களும் கும்பகர்ணன் வதைப்படலம், சித்திரன் சித்திரக் கொத்து, நல்வியல் நல்வழி, அறிஞர்களின் அறிவு நூல்கள், கதைப்புத்தகங்கள், பாடசாலைப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள் யாவும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கும் நூல் நிலையங்களுக்கும் விசேட கழிவு உண்டு.

மக்மிலன் புத்தகசாலை,
*8, பஸ் நிலையம்,*
*யாழ்ப்பாணம்.*

ஶ்ரீகாந்த புத்தகசாலை,
*165,மின்சார நிலைய வீதி*
*(யாழ்.பஸ்நிலையம் வடக்குப்பக்கம்),*
*யாழ்ப்பாணம்.*

(17534)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.சமூக அபிவிருத்தி மன்ற முன்னாள் செயலாளர்

## திருமதி திருஞானசோதி குணேந்திரன்

'ஞானா'

அவர்களின் மறைவினால் ஆறாத்துயரில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம்
தலைவர் - திருமதி நவநீதம் ஜெகதீசன்,
மன்ற - பணிப்பாளர் சபை,
மன்ற - பணியாளர்கள்,
கழக - அங்கத்தவர்கள். (17536)

*ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 - 2 - 1935



மறைவு
5 - 5 - 2002

## திருமதி கனகரெத்தினம் தவமணி

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாது எங்கள் துயரம்!

*'சுதா வெதுப்பகம்'*
*சரவணை கிழக்கு, வேலணை - 9.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(17485)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## சின்னத்தம்பி ஏகாம்பரம்

(உரிமையாளர், பரமேஸ்வரன்ஸ்,
178, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை)

மலர்வு 12.11.1920 உதிர்வு 05.04.2003

எமது அன்புத் தெய்வத்தின் அஞ்சலி நிகழ்வு இன்று (05.05.2003) திங்கட்கிழமை திருகோணமலை - கன்னியா புனித ஸ்தலத்தில் நடைபெறும். அத்துடன் அமரரது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகியவற்றிலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி.கணேசமூர்த்தி
(சகோதரன்).

*அல்வாய் மேற்கு, அல்வாய்.* (17458)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
15 - 05 - 1914



விண்ணில்
05 - 04 - 2003

திருமதி

## செல்லையா காமாட்சி

(மீசாலை வடக்கு, கொடிகாமம்)

*அன்புக்கும் பண்புக்கும் பிறப்பிடமாகத் திகழ்ந்த அன்னையே!*

*உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளிலும் பிரிவுத் துயரிலும் கலந்துகொண்ட எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு, அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் இன்று (05.05.2003) திங்கட்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"வள்ளி வாசா"*
*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.* (17526)

மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

---

# 31ஆம். நாள் நினைவஞ்சலி

திருமதி

## செல்லையா காமாட்சி

*(மீசாலை வடக்கு - கொடிகாமம்)*

எமது சங்கத்தின் முன்னாள் தலைவியின் மறைவால் வருந்தும் அவரின் குடும்பத்தவர்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இராமாவில் முருகனை வேண்டுகின்றோம்.

மீசாலை வடகிழக்கு மாதர்
சிக்கன கடன் வழங்கும் சங்கத்
தலைவரும், அங்கத்தவர்களும்.

(17527)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

*மலர்வு*
18 - 12 - 1937



*உதிர்வு*
05 - 04 - 2003

## அமரர் நாகர் நடேசு (இராசு)

எங்கள் அன்புத் தெய்வமே!
நாள்கள் முப்பத்தொன்று
நகர்ந்து விட்ட போதும் - நாம்
தேடுகின்றோம் உங்கள் - நிஜமான
நினைவுகளை........!
எங்கள் உயிரோடு உறைந்து விட்ட
உங்கள் உணர்வுகளை உன்னதமாக
சுமந்து செல்வோம்!
மெழுகாக நெஞ்சுருகி அஞ்சலிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

இன்று (05.05.2003) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"கதிரொளி"*
*அல்வாய் வடக்கு.* (17508)

- குடும்பத்தினர்.

# இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் பஜாஜ் மோட்டார் சைக்கிளுடன் வெற்றி நிச்சயம் !



**pulsar**



விலை ரூபா 107,835/-
• 150 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• 5 கியர்கள் கொண்ட வேக ஒழுங்கு.

**Caliber croma**



விலை ரூபா 89,930/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.

**BOXER AT**



விலை ரூபா 64,200/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.

**BOXER CT**



விலை ரூபா 68,568/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.

**Caliber**



விலை ரூபா 82,355/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.

**M80 FOUR STROKE**



விலை ரூபா 55,783/-
• 74 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.

**Legend**



விலை ரூபா 83,811/-
• 145 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 65 கி.மீ.

**BOXER CT Deluxe**
K-Tec Technology



விலை ரூபா 71,526/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 91 கி.மீ.

mel ads 3/5/2164

ஒவ்வொரு மோட்டார் சைக்கிளுடனும் ஜக்கட் ஒன்று இலவசம்.

மேற்படி விலைகள் அனைத்து வரிகளும் புற நீங்களானவை மற்றும் விலைகள் முன் அறிவித்தலின்றி மாற்றத்திற்குரியவை.

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து** ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.

நீங்கள் நாடுவது வேகமா? சிக்கனமா? அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். மற்றும் DPMC யின் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் சேவை, பராமரிப்பு மற்றும் உதிரிப்பாக வியாபார வலையமைப்பினூடாகவும், பிராந்திய அலுவலகங்களுடாகவும் தன்னிகரற்ற வேகமான வாடிக்கையாளர் சேவையையும் DPMC யின் ஒன்றுதிரட்டிய வளங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

தன்னிகரற்ற உத்தரவாதம்

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

DPMC

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600
பெக்ஸ் : 074-700677, 687175. ஹொட்லைன் : 074-715050

அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி ட்ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777-979279, 0777-155730

: குறிஞ்சி ட்ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே: 0777-979279, 0777-155730

மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற

# சுற்றுப்போட்டிகள் இரண்டில் யாழ்.பி.செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே5

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

யாழ்ப்பாண பிரதேச செயலக அணிக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணிக்கும் இடையிலான இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஆட்டம், தொடக்கம்முதல் இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போதும், ஆட்டம் தொடங்கி 11ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது.

அதேபோல இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மேலும் ஒரு கோலை அடித்து 2-0 என்ற கோல் கணக்கில் முன்னணியில் இருந்தது.

அதனைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி தமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முதலாவது கோலைப் பெற்றது. இதன் பின்னர் 5நிமிடத்திற்குள் யாழ்ப்பாண செயலக அணியினர் மேலும் ஒரு கோலை அடித்து தமது கோல் எண்ணிக்கையை 3ஆக உயர்த்திக்கொண்டனர்.

ஆட்டம் முடிவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி தனக்குக் கிடைத்த தண்ட உதையினை (பனால்டி) கோல் கம்பத்தினுள் செலுத்தி தமது எண்ணிக்கையை 2ஆக உயர்த்திய போதும், அவர்களால் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியின் வெற்றியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இறுதியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி 3-2 என்ற கோல் அடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை தோற்கடித்தது.

இதே நேரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி பல கோல்கள் பெறும் வாய்ப்புகளை தவறவிட்டமை சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

இதேவேளை -

வடக்கு-கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும், நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதின.

ஆரம்பம்முதல் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி 48-39 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டியது.

கடந்த பதின்மூன்று வருடங்களின பின்னர் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மீண்டும் இவ்வருடம் சம்பியனாகியுள்ளது.

அதேவேளை கடந்த மூன்று வருடங்களாக முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று வந்த பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி அரையிறுதிவரை முன்னேறிய போதும் அரையிறுதியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியிடம் தோல்வி அடைந்தமையால் இறுதி ஆட்டத்தில் ஆடும் வாய்ப்பை இழந்தது.(எ-5-86)

## இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் இன்று ஆரம்பம்

அச்சுவேலி,மே5

அரசாங்க பாடசாலைகளில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை மண்டபங்களாக பயன்படுத்தப்படாத பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாடசாலைகள் 21ஆம் திகதி ஆரம்பமாகும்.(எ-11)

# கொழும்புத்துறையில் குடிதண்ணீர் திருட்டு!

அரியாலை,மே5

நிலத்தடிக்குழாய் மூலம் கொழும்புத்துறைப் பகுதியில் விநியோகிக்கப்பட்டுவரும் குடிதண்ணீரை சட்டத்திற்குப் புறம்பாகச் சிலர் தமது வீடுகளுக்குப் பிரத்தியேக இணைப்புகளை ஏற்படுத்தி பெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

யாழ்.மாநகர சபை நிலத்தடிக் குழாய் மூலம் விநியோகிக்கும் குடிதண்ணீரை, இவ்வாறு சட்டத்துக்குப் புறம்பாக சிலர் திருடுவதால் அப்பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் சீர்குலைவதாகவும் - இதனால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.(ஒ-17)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி

### திருஞானசோதி குணேந்திரன்

எமது அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி திருஞானசோதி குணேந்திரன் அவர்கள் 03.05.2003 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கின்ற அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினரும்,
உத்தியோகத்தர்களும்,
தகவல் தொழில்நுட்பப் பூங்கா.

272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (c/27703)


## சித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.சைவ பரிபாலன சபையினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பட்டப் பரீட்சைகள் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சாத்திகளுக்குரிய நேர அட்டவணைகள், அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## சனசமூக நிலையங்களிடையில் விளையாட்டுப் போட்டி

வலி.வடக்கு,மே5

நல்லூர் பிரதேச சபையினால் சனசமூகநிலையங்களுக்கு இடையே இவ்வாண்டும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வருடாந்தம் சனசமூக நிலையங்களிடையே நல்லூர் பிரதேச சபை விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேற்கொண்டுள்ளார். (எ-86)

## தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,மே5

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியில் இடம்பெற்ற இறுதியாண்டு பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளதாகவும்-

விடைத்தாள் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 9 ஆம் திகதிக்கு முன்பாக உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்து அதிபரிடம் கையளிக்குமாறும் -

உதவி அதிபர் எம்.அலோசியஸ் அறிவித்துள்ளார்.

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

வட்டுக்கோட்டை,மே5

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கும் நடைபெறும்.

அதைத் தொடர்ந்து விவசாயக் குழுக் கூட்டம் உதவிப் பிரதேச செயலர் க.தர்மராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்துக்கு துறைசார் திணைக்களங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறும் - அவர் கேட்டுள்ளார்.(எ-160)

## சோமஸ்கந்த வித்தியாரம்பதின விழா

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி நிறுவப்பட்டு கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதைக் குறிக்கும் வித்தியாரம்பதின விழா நாளை செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெற உள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார்.(ஒ-72)

## கல்விமாணி பரீட்சைக்கு விண்ணப்பம்

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் கல்விமாணி(பி.ஈ.டி.) பாடநெறியின் பகுதி I பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.இந்துக்கல்லூரி நிலையத்தில் பதிவுசெய்து மேற்படி கல்விமாணி பாடநெறியை பயிலும் ஆசிரியர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு இந்த விண்ணப்பத்தின் பொருட்டு நிலையத்தில் ஒன்று கூட வேண்டுமென சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தனலட்சுமி வில்வநாதன் அறிவித்துள்ளார்.(எ-11)

## கலைப்பீட முதலாம் வருட மாணவர் கவனத்துக்கு!

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 11 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

முதலாம் வருட கலைப்பீட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.(எ-12)

# மக்கள்வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே5

பாடசாலைச் சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்கு 'சிசு உதான'வில் ஒரு கோடி ரூபாவிற்கும் மேல் சேகரித்து யாழ். மாவட்டத்தில் சாதனை படைத்த மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்தக் கௌரவிப்பு விழா நேற்று நண்பகல் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த வருடம் பாடசாலைச் சிறுவர்களுக்கான சேமிப்புக்கணக்கில் ஒருகோடி ரூபாவுக்குமேல் சேமிப்பாகப் பெற்ற யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளை முகாமையாளர் என்.நாகேஸ்வரன், ஸ்ரான்லிவீதி மக்கள்வங்கிக்கிளை முகாமையாளர் து.ரகு, சாவகச்சேரி மக்கள்வங்கி கிளை முகாமையாளர் எஸ்.பாலச்சந்திரன், சுன்னாகம் மக்கள்வங்கி கிளை முகாமையாளர் எஸ்.ஹென்றி ஆகிய நால்வருமே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

இலங்கை மக்கள்வங்கியின் தலைவர் லால் நாணயக்காரவினால் இந்தச் சாதனையாளர்களுக்கான நினைவுப்பரிசில்களும் பாராட்டுப்பத்திரங்களும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இவற்றை யாழ். மாவட்ட மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் எம்.கே.சிவபாதவிருதயர் நேற்று உரியவர்களிடம் கையளித்தார்.(ஒ-12)



வங்கி முகாமையாளர் கௌரவிப்பில், மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளர் து.ரகு வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.சிவபாதவிருதயரிடம் இருந்து பரிசினை பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். அருகில் கௌரவிப்பு பெற்ற ஏனைய முகாமையாளர்கள் காணப்படுகின்றனர். (படம்:ராஜ்)


COMPUTER P IV 1.7/1.8/2.4



யாழ் நகரிலே மிகக் குறைந்த விலையில்
Pentium 4

அனைத்து விதமான PRINTERS, SCANNERS, UPS போன்றவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்
கணனிக் கொள்வனவிற்கான வங்கிக் கடன் வசதி செய்து கொடுக்கப்படும்.

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம்

PC PARADISE

PC Paradise
No. 61, Clock Tower Road, Jaffna.
TP.No : 0777 271220



ஆங்கிலக் கல்லூரி (அச்சுவேலி)

CIITயின் Dip.in Ms Office

கணனிச் சான்றிதழ் வழங்கல் 15.05.2003

இதுவரை இந்நிறுவனத்தில் பதிவினை மேற்கொண்டு கல்வி பயின்றவர்கள் எதிர்வரும் 08.05.2003 இற்கு முன்னர் நிறுவனத்துடன் தவறாது தொடர்பு கொள்ளவும்.

சந்நிதி வீதி, அச்சுவேலி. (17547) Director CIIT



## மரண அறிவித்தல்

திருமதி

### சிவபாதசுந்தரம்பிள்ளை கேதீஸ்வரி

காரைநகர், இலந்தைச்சாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதசுந்தரம்பிள்ளை கேதீஸ்வரி நேற்றுமுன்தினம் (03.05.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராமநாதன் சிவபாதசுந்தரம்பிள்ளை (உரிமையாளர் - S.R.S., வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தி.கணபதிப்பிள்ளை (National Grindleys Bank) - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காரைநகர், களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமநாதன் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் மயூரி, திவாகரன், சங்கர், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி (லண்டன்), கதிர்காமநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்னேஸ்வரன் (லண்டன்), சிவயோகம் (லண்டன்), சிவசுப்பிரமணியம் (நில அளவைத் திணைக்களம், கொழும்பு), தெய்வானை, சிவஞானசுந்தரம்பிள்ளை (மக்கள் வங்கி, கன்னாதிட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சிவபாதசுந்தரம்பிள்ளை (கணவர்)

இலந்தைச்சாலை,
காரைநகர். (17548)

# கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை
உதவி அரசாங்க அதிபர் பணிமனையின்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

## திருமதி
## திலகராஜா ஜெகத்ஜனனி

அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி பெருங்கவலையில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

*பிரதேச செயலகம்,*
*கரவெட்டி.*
(சி-27698)
சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி
## குணேந்திரன் திருஞானசோதி (ஞானமக்கா)



அன்னை மடியில்
28.02.1958
ஆண்டவன் அடியில்
03.05.2003

(நீர்வேலி வடக்கு மகளிர்
சி.க.கூ.சங்க போசகரும், தலைவியும்)

அன்பின் சின்னமே
அறிவின் இன்ப ஊற்றே
நீர்வையின் குலக்கொழுந்தே
மாதர்களின் மணி விளக்கே
எம்மாதர்களின் உயர்வுக்காய்
உம்மையே உருக்கினையோ
எமக்கெல்லாம் நல்வழிகாட்டிவிட்டு
தனிவழிதான் சென்றதேனோ

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பகவானை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் :
நீர்வேலி வடக்கு மகளிர் சி.க.கூ. சங்கம்,
நீர்வேலி சமுக அபிவிருத்தி மன்றம்,
நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கம்,
நீர்வேலி வடக்கு பகவான் முன்பள்ளி
அங்கத்தவர்களும் மாணவர்களும்

*நீர்வேலி.* (17553)

# 18 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## திருமதி சிவநாயகி கந்தசாமி (கிளி)

(செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு)

எண்ணரிய பிறவியில் எம் குலவிளக்காய்
உதித்து மண்மகிழ நாளும் நல் அறங்கள் பல
புரிந்து தண்ணொளியில் வாழத் தயவு
தந்த எம்தாயே கண்நெகிழ எங்கள்
காணிக்கை ஏற்றருள்வீர்!

*சின்னப்புதுக்குளம்,*
*வவுனியா.*
*T.P:- 0776040543*
(சி-27707)
உம்பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள்,
மருமக்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை சரஸ்வதி

தணங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சரஸ்வதி நேற்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை கைதடியில காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை (ஐயா) அவர்களின் அன்பு மனைவியும் ஆனந்தராசா, மல்லிகாதேவி, பேரின்பநாதன் (அதிபர், யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), ரகுநாதன் (கணக்காய்வுப் பரிசோதகர், அரச கணக்காய்வு உபஅலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனா, ஆனந்தகுமார், கலாதேவி, வதனா (ஆசிரியை, யாழ்.கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் சகோதரியும், உமாசங்கர், கௌரிசங்கர், ஞானசங்கர், கிரிசாந்த், மேருயா, துவாரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2003) திங்கட்கிழமை, பிற்பகல் 3 மணியளவில் கைதடி மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரியான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.*
(C/27709)
தகவல்:
குடும்பத்தினர்.

## வலிகாமம் வலயத்தில் அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வலி.தெற்கு,மே5

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள இரண்டு பாடசாலைகளில வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நவாலி மகாவித்தியாலயம், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் என்பவற்றிலேயே அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது.

அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கப் பொருத்தமானவர்கள் உரிய முறைப்படி தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து இம்மாதம் 19ஆம் திகதிக்கு முன்பாக வலய கல்வி அலுவலகத்தில் அனுப்பி வைக்க வேண்டுமென கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (எ-152)

## சுகாதார முறைப்படி தயாரிக்கப்படாத 'ஜுஸ்' குருநகரில் விற்பனை

குருநகர்,மே5

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் தயாரிக்கப்பட்ட 'ஜுஸ்' பக்கெட்டுக்கள் குருநகர்ப் பகுதியில் பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

ஒரு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். இந்த 'ஜுஸ்' பக்கெட்டுக்களை வாங்கி அருந்தும் சிறுவர்கள் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் -

இது தொடர்பாக யாழ்.மாநகர சுகாதார பகுதியினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - குருநகர் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-51)

## கரம்பொன்னில் பன்ன வேலைப் பயற்சி

யாழ்ப்பாணம்,மே5

கரம்பொன் கிராம சேவையாளர் பிரிவில் இயங்கும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் பன்னவேலைப் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபை தேசிய தொழில் பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது என அப்பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

எதிர்வரும் 12ஆம் திகதி இந்த பயிற்சி நெறி ஆரம்பாகும் என்றும் -

பயிற்சியில் இணைந்துகொள்ள விரும்பும் 25வயதுக்கு உட்பட்ட யுவதிகள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ)

## தவறிவிட்டது

நெல்லியடிக்கும் ஆவரங்கால் சந்திக்குமிடையில் HIACE வானின் பின் ஆசனம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
16,ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0777 - 543687
என்ற முகவரியில்
தொடர்புகொள்ளவும். (17556)


லஷ்சுமி இணுவில்
ரஜனி. சௌந்தர்யா.
ரம்பா. ரகுவரன நடித்த
அருணாச்சலம்
தினசரி: 11.00, 3.00, 7.00

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், சிம்ரன்,
ரோஜா, வடிவேல்
அரசு
கா.நேரம் 10.30, 2.30, 6.30
JURASSIC PARK -3
3 - 6 வரை இரவு 9.30 மட்டும். (C/27706)

நிறைஞ்சனாஸ்
இன்று முதல்
சிவாஜி, பத்மினி நடித்த
தில்லானா மோகனாம்பாள்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force ஜக்சன்

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
மக்கள் திலகம் M.G.R, ஜெயலலிதா,
நம்பியார் மற்றும் பலர் நடித்த
இரகசிய பொலிஸ் 115
தினசரி காட்சிகள் :
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)


# மரண அறிவித்தல்கள்

## P.S.பிச்சையப்பா

*('கலாபூஷணம்' இலங்கை வானொலி புகழ்)*

அகில இலங்கை வானொலி புகழ் நாதஸ்வர வித்துவான் ஈழ நல்லூர் P.S.பிச்சையப்பா அவர்கள் சனி இரவு (03.05.2003) இந்தியாவில் காலமானார்.

அன்னார் அமரர் சரோஜாவின் அன்புக் கணவரும் தில்லை நடராஜாவின் சகோதரனும் பிரேமராணி, ரவீந்திரன் (தவில் வித்துவான்), சுலோசனாதேவி, வனஜராணி, ரஜீந்திரன் (ரஜீவன், நாதஸ்வர வித்துவான்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ராஜன் (நாதஸ்வரம்), அமரர் மகேந்திரன் (நாதஸ்வரம்), கண்ணன் (நாதஸ்வரம்), கமலேஸ்வரி, வாஸஸ்பதி (சங்கீத ஆசிரியை, யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் பிரியா, தர்ஷன், தீபா, ஜனா, சப்தன், தணிகன், ஸாகித்யன், ராகசுதன், அமரர் சாரங்கி, தரங்கினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*259, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*
(C/27710)
தகவல்:
பிள்ளைகள்.

## கணபதிப்பிள்ளை நடராசா

*(முன்னாள் புத்தகசாலை உரிமையாளர்,*
*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.)*

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா நேற்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் மகனும் கமலாம்பிகை, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கிருஷ்ணராஜா (பத்திரிகை முகவர் - இணுவில்) மற்றும் தனபாலசிங்கம் (பாலசிங்கம்), விஜயகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் தயாழினி (கொழும்பு), ஐங்கரன் (கனடா), யாழினி, ஸாம்பவி ஆகியோரின் மாமனாரும் விஜயகுமாரனின் (கொழும்பு) சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*61, பிறவுண் வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*
(17558)
தகவல்:
தனபாலசிங்கம்
(பாலசிங்கம் - மைத்துனர்)

## திருமதி இராசையா இராசாத்தி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா இராசாத்தி நேற்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி இராசையாவின் அன்பு மனைவியும் விஜயராணி, விமலா, விஜயகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயசிங்கம் (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), துரைசிங்கம் (Commercial Bank, Jaffna), பாக்கியநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜகாரியர் வீதி,*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.*
(17552)
தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்

## தர்மராசா ஜெயராசா

*(முன்னாள் கரவெட்டி பிரதேச சபைத் தலைவர்)*

தர்மராசா ஜெயராசா அவர்கள் 03.05.2003 அன்று அகால மரணமானார்.

அன்னார் தர்மராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் வசந்தராணியின் பாசமிகு கணவரும் சுதாகரன் (மக்கள் வங்கி, நெல்லியடி), கிருபாகரன், அகல்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமாலினியின் அன்பு மாமனாரும் சரண்யாவின் அன்புப் பேரனும் பாலச்சந்திரன், சிவலிங்கம், சண்முகலிங்கம், சுதாநாயகராசா, தெய்வகுலராணி, தர்மகுலராணி, ஜெயகுலராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரவெட்டி கிழக்கு யார்க்கருவில் இன்று (05.05.2003) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யார்க்கரு,*
*கரவெட்டி கிழக்கு.*
(C/27708)
தகவல்:
சுதாகரன் (மகன்)

## திருமதி
## திருஞானசோதி குணேந்திரன் (ஞானம்)

*(நூலகர், தகவல் தொழில்நுட்பப் பூங்கா)*

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி திருஞானசோதி குணேந்திரன் அவர்கள் 03.05.2003 அன்று காலமானார்.

அன்னார் அருளம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் இராசரத்தினம் - ஞானப்பூங்கோதை (இணுவில்) தம்பதிகளின் அன்பு மருமகளும் குணேந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் யதுபாலன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), நிருபா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருளாந்தசிறி (சிறி) (குரு டீசல், யாழ்ப்பாணம்), சச்சிதானந்தசிவம் (லண்டன்), சௌந்தரசோதி (லண்டன்), சண்முகவடிவேல் (டென்மார்க்), கலாஜோதி (ஹொலண்ட்), பிரேமச்சந்திரன் (லண்டன்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிரியாசக்தி (சுவிஸ்), நித்தியகல்யாணி (லண்டன்), சிவபாலன் (லண்டன்), ஹெலன் (டென்மார்க்), மகேந்திரன் (ஹொலண்ட்), ஜெகதீஸ்வரி (லண்டன்), மகிந்சளா (சுவிஸ்), காலஞ்சென்ற பாலேந்திரன், திருமதி நந்தினி ரவிந்திரன் (ஜேர்மனி), திருமதி சுகந்தினி சந்திரா (கனடா), திருமதி ஜெயந்தினி ஜீவராஜா (ஜேர்மனி), திருமதி சாந்தினி ஞானசூரியர் (விரிவுரையாளர் - உயர் தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.05.2003) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*
(17555)
தகவல்:
இ.குணேந்திரன் (கணவர்)

# கடந்த வருடம் மாத்திரம் 600 சிறுமியர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர்

கொழும்பு,மே5

பதினெட்டு வயதுக்கு குறைந்த 600 சிறுமியர் கடந்த வருடம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 5 வயதுக்குட்பட்ட 65 சிறுமியரும், 10 வயதுக்குட்பட்ட 200 சிறுமியரும் அடங்குவரென பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹெரத் கடந்த திங்கட்கிழமை கோட்டே தேசிய சிறுவர், சிறுமியர் பாதுகாப்பு அதிகார சபையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த வருடம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட, பல விதமான துன்புறுத்தல்களுக்குள்ளான 560 சிறுமியர் தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன. இதே வேளை, தேசிய சிறுவர், சிறுமியர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 386 சிறுமியர் வல்லுறவு சம்பவங்கள் தொடர்பாகவே முறைப்பாடுகள் கிடைத்தன.

பலர் பெற்றோர் பயம் மற்றும் வெட்கம் காரணமாக இது போன்ற சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகளைத் தெரிவிக்க விரும்புவதில்லை.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## யாழ்.கோட்டை முன்பாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றும் அரசின் இந்தத் திட்டத்துக்கு குடாநாட்டில் பொது அமைப்புகள் மற்றும் வெகுஜன நிறுவனங்களிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் முதலாவது அடையாள நடவடிக்கையாக இன்று காலை கோட்டைப் பகுதியில் ஒன்று கூடவுள்ள பொது மக்கள் அங்கு மறியலில் ஈடுபடுவர்.

இன்றைய போராட்டம் தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையிலும், மக்களின் இயல்பு வாழ்வுக்கு ஊறு விளைவிக்கும் வகையிலும் யாழ்நகரின் மையப் பகுதியாகிய யாழ்.கோட்டைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் புதிய படை முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான இச்செயற்பாட்டால் யாழ்ப்பாணத்து மக்களது அன்றாட இயல்பு வாழ்க்கைக்கு, அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

யாழ்.கோட்டைப் பகுதியில் புதிய முகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 8.00 மணியளவில் கோட்டைப் பகுதியில் எதிர்ப்புப் போராட்டத்தை யாழ்.மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் நடத்துகின்றது.

இப்போராட்டத்தில் அனைத்துப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும், கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள்விடுக்கின்றோம். அதேவேளை, யாழ்மாநகர எல்லைக்குட்பட்ட பொதுமக்களும் இப்போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கோட்டையில் முகாம் அமைக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்று கோரி மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் இன்று காலை கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகளிடம் நேரடியாக மகஜர் கையளிக்கவிருக்கின்றனர்.

ஜனாதிபதி, பிரதமர், விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்களே கையளிக்கப்படவிருக்கின்றன. (ஐ-3)

## யாழ்.நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றுவது அவசியமான விடயமாகும். எனவே, படையினர் அங்கிருந்து வெளியேறியே ஆகவேண்டும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் இந்த முகாம்களில் இருந்து படையினர் வெளியேறுவதற்கு மாற்றுவழிகள் இரண்டு உண்டு. மாநகரசபை எல்லைக்கு வெளியேமக்கள் குடியிருப்பு இல்லாத பகுதிக்கு முகாமை மாற்றலாம். இல்லாவிட்டால் பலாலி படைத் தளப்பகுதிக்கு மாற்றலாம்.

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை கொழும்புவந்து சேர்ந்தனர். அவர்களும் இலங்கை அரசாங்கத் தலைவர்களுடனான பேச்சுக்களில் பங்குபற்றினர்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரும் ஏனைய இராஜதந்திரிகளும் கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவர் வேபிரபாகரனையும் அரசியல் துறைத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்துவர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷியும் கிளிநொச்சி செல்வார்.

இன்று கொழும்பு வரவிருக்கும் அரசியல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் அவரது பாரியார் அடேல் பாலசிங்கமும் இன்றே கிளிநொச்சி செல்வர். அன்ரன் பாலசிங்கத்தையும் நோர்வே பிரதியமைச்சரும் ஏனையோரும் சந்திப்பர்.

ஜப்பானில் ஜூன்மாதம் நடைபெறவிருக்கும் மாநாட்டில் புலிகள் இடக்கம கலந்துகொள்ளும் வாய்ப்பு குறித்து நோர்வே பிரதியமைச்சர் தலைமையிலான குழுவினர் புலிகளின் தலைவர்களுடன் விசேடமாக ஆராய்வார்கள்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான அடுத்தசுற்று சமாதானப்பேச்சுக்கள் குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்துவர். (ஐ-9)

## 'சிறான்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் நீர்ப்பாசனத் திட்டங்கள் முதலானவை 'சிறான்' அங்கீகரித்த 65 அபிவிருத்தித் திட்டங்களில் அடங்குகின்றன.

மாங்குளம் ஊடாக முல்லைத்தீவுக்கும் வெள்ளான்குளத்துக்கும் இடையில் வீதிப் புனரமைப்பு 57 கோடி 80 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும்.

வீதிப்புனரமைப்பு வேலைகளைத் துரிதமாகச் செய்து முடிப்பதற்கு வசதியாக முழு வீதிப் புனரமைப்பையும் ஓர் ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்காமல் பலரிடம் பகுதி பகுதியாக ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### சுற்றுலா மேற்கொண்டு 27 அதிபர்கள் கனடா பயணம்

யாழ்ப்பாணம்,மே5

இலங்கையில் உள்ள தேசிய பாடசாலைகளைச் சேர்ந்த 27 அதிபர்கள் மூன்று வாரகால கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு கனடாவுக்குச் சென்றுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி திங்கட்கிழமை முதல் எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதிவரை கனடாவில் உள்ள றொறன்ரோ, ஒன்ராறியோ அதிபர்கள் சபை ஏற்பாடுசெய்துள்ள கல்விச் சுற்றுலாவில் இவர்கள் பங்குபற்றுவர்.

27 அதிபர்களில் 20 சிங்கள அதிபர்களும் 6 தமிழ் அதிபர்களும் ஒரு முஸ்லிம் அதிபரும் அடங்குகின்றனர்.

கல்விச் சுற்றுலாவுக்குச் சென்றுள்ள தமிழ், முஸ்லிம் அதிபர்கள் விவரம் வருமாறு:-

திருமதி செல்வமலர் கந்தநேசன் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருமதி என்.மாணிக்கவாசகம் - வவுனியா சைவப்பிரகாச மகாவித்தியாலம், எஸ்.நவரத்தினம் - திருகோணமலை விவேகானந்த வித்தியாலயம், ரி.முத்துக்குமாரசாமி - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, என். புண்ணியசீலன் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, எஸ்.சந்திரசேகரம் - நுவரெலியா திருத்துவக்கல்லூரி - ஏ.ஆர்.முகமட்ரீட் - கிண்ணியா மகா வித்தியாலயம். (எ-173)

### நாதஸ்வர கலைஞர் காலமானார்

யாழ்ப்பாணம்,மே5

நல்லூரைப் பிறப்பிடமாகக்கொண்ட பிரபல நாதஸ்வர வித்துவான் பி.எஸ். பிச்சையப்பா நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் நாதஸ்வரக் கலை மூலம் பிரபலம் பெற்றிருந்த இவருக்கு அண்மையில் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டது.

மருத்துவ சிகிச்சைக்காக அண்மையில் இந்தியா சென்றிருந்த இவர் அங்கு காலமானார். (ஐ)

### படை அதிகாரிகளை பிரதமர் சந்திப்பார்

கொழும்பு,மே5

யாழ்நகரப்பகுதியில் உள்ள படை முகாம்களை இடமாற்றுவதில் எழுந்துள்ள எதிர்ப்பு நிலைமைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படை அதிகாரிகளைச் சந்தித்து ஆராயவுள்ளார்.

இந்த வாரம் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்ஒஸ்ரின் பெர்னான்டோ மற்றும் குடாநாட்டுப் படை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர் என்று ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது. (ஐ-9)

# கற்பிட்டியில் பெண்ணொருவர் கிடங்கிலிருந்து சடலமாக மீட்பு!

கொழும்பு,மே5

இரண்டு கணவன்மார்களுடன் வாழ்ந்து வந்தார் எனக் கூறப்படும் பெண்ணொருவர், கற்பிட்டியில் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். மூன்று நாள்களின் பின்னர் அவரது சடலம் கிடங்கொன்றிலிருந்து கற்பிட்டி பொலீஸாரால் மீட்கப்பட்டது.

மூதூரைச் சேர்ந்த இந்தப் பெண்மணி கபூர் ஜமால் பதீலா உம்மா என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவருக்கு மூதூரில் ஒரு கணவரும் கற்பிட்டியில் ஒரு கணவரும் இருந்துள்ளனர் என் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட கற்பிட்டிப் பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பிரஸ்தாப பெண்மணி மூதூரிலும் கற்பிட்டியிலும் மாறி மாறி வாழ்க்கை நடத்திவந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சடலத்தில் பல காயங்கள் தென்படுகின்றன. ஆதலால் கத்தியால் பல முறை குத்தி இந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (ஐ)

### ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் படுகொலை:

# சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க சட்டமா அதிபர் திணைக்களம் ஆட்சேபம்!

கொழும்பு,மே5

ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் அடித்துக் கொலை செய்யப்பட்ட மாணவரின் கொலைக்குக் காரண மானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 23 மாணவர்களுக்கும் பிணை வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களை விசாரிப்பதற்கென விசேட நீதிமன்ற அமர்வு ஏற்படுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட விசேட நீதிமன்ற விசாரணைகள் பூர்த்திப் பெறுவதற்கிடையில் கைதான மாணவர்களுக்குப் பிணை வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. (ஐ)

### கந்தபுராண படன பூர்த்தி விழா

யாழ்ப்பாணம்,மே5

திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தபுராண படன பூர்த்தி விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் செல்வி சபாபதி தங்கப்பொன் தலைமையில் நடைபெறும். (ஐ-6)


## இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு அம்பிகா அம்மா.

மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.

உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:-

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மடோனா லொட்ஜ்,

121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்

(17452)


## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரநாதன் கணேசபாக்கியம்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரநாதன் கணேசபாக்கியம் நேற்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு காலமானார்.

அன்னார் பழனிப்பிள்ளை ஈஸ்வரநாதனின் (முன்னாள் ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி, தற்போது கட்டைவேலி, M.M.T.M.S. ஆசிரியர்) அன்பு மனைவியும் கோபிநாத் (கொழும்பு, ரத்மலானை இந்துக் கல்லூரி), ரவீந்திரநாத் ஆகியோரின் தாயாரும் சிவனேசராஜா (நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, குருநகர்), அருள்நேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பி.ப. 3.30 மணியளவில் சோனப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*RAVEENS TELECOM*
*சிங்கத்தின் வீடு,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (C/27711)

தகவல்:
ப.ஈஸ்வரநாதன்
(கணவர்)

### தம்பிப்பிள்ளை மயில்வாகனம்

*(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்)*

கோண்டாவில் கிழக்கு, அரசடி வீதியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை மயில்வாகனம் அவர்கள் நேற்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் தேவாமிர்தம் அவர்களின் பாசமிகு கணவரும் சந்திரகுமார் (யாழ்பல்கலைக்கழக நூலகம்), கோகிலகுமாரி, மோகனகுமார் (லண்டன்), ஜெயகுமாரி (லண்டன்), பிறேமகுமாரி, சசிகுமாரி (லண்டன்), விஜயகுமாரி, வசந்தகுமார் (லண்டன்), சதீஸ்குமார், செல்வகுமாரி, கேமலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரதிமாலினி, ரஞ்சன், தவராஜா (லண்டன்), குமாரகுரு (நீர் வேலைப்பகுதி - யாழ்மாநகரசபை), பிறேமதாஸ் (லண்டன்) டில்ஷன (நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரஷாந், கோபிநாத் பதுஷனா, தக்ஷலா, சம்ஜா, தனுஷாந், பானுஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் தவமணிதேவி, பேரின்பநாயகி, காலஞ்சென்ற அமிர்தலிங்கம், சிறிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, மாலை 4 மணிக்கு கோண்டாவில் கிழக்கு, கொட்டைக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அரசடி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.* (17559)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## NANDI BRAND RUPIKA TILES

(இலங்கையில் பொறியியலாளர்களின் நற்சான்றிதழ் பெற்ற No. 1 தர ஓடுகள் (2.5kg), முகட்டோடுகள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடங்கள்:

ARALIYA STORES
No.11, Negombo Road, Dankotuwa.
T.P. : 031-58174

RUPIKA TILES FACTORY
UDANGAWA, KOCHCHIKADE.
T.P. : 031-77346

No.6, HINDU LADIES LANE,
KANTHARMADAM, JAFFNA.
T.P. : 021-222 3268

புதிய வீடுகள் நிர்மாணிப்பவர்களே!
கட்டட ஒப்பந்தகாரர்களே!
தரம் குறைந்த ஓடுகளை வாங்கி ஏமாறாதீர்கள்!

தரத்தின் சின்னம் நந்தி

(17541)



## SUBRA

சித்தன்கேணி

இன்று ஆரம்பம்

O/L DAY

05.05.2003 (திங்கள்)
காலை 7.00

(சி-27614)



## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி.

★ ENGLISH CLASS

புதிய பிரிவு ஆரம்பம்:
05.05.2003 பி.ப. 4 மணி
ஆசிரியர் By: சடகோபன்
A/L எடுத்த மாணவர்களுக்காக.

★ O/L DAY CLASS பிரிவு II
ஆரம்பம்: 06.05.2003 காலை 8.30 மணிக்கு

(C/27705)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# எம் தாயக மண்ணைக் கிளறிப்பாருங்கள் கரும்புலிகளின் உடல் துண்டாங்கள் கிடைக்கும்!

## தியாக வரலாறுகளை உணரவைத்த வெற்றி விழா

ஈழத்தமிழனின் வீரத்தினை உலக அரங்கிலே மீண்டும் ஒரு தடவை ஓங்கி ஒலித்த ஆனையிறவு பெருந்தள வெற்றியின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் ஆனையிறவுத் தளத்தை மீண்டும் கைப்பற்ற முயன்ற இராணுவத்தினரின் தீச்சுவாலைப் படை நடவடிக்கையை வெற்றிகரமாக முறியடிக்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நினைவு விழாவும் கடந்த 28ஆம் திகதி பளையில் நடந்தன.

அன்றையதினம் கண்டிவீதியில் - முகமாலைக்கும் பளைப் பகுதிக்கும் இடையிலான நீண்ட பிரதேசம் சிறப்பான முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வீதியின் இருமருங்கிலும் மின் விளக்குகள் கட்டப்பட்டிருந்தன. சிவப்பு மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன.

குடாநாடு உட்பட தமிழர் தாயகத்தின் சகல மாவட்டங்களிலிருந்தும் அலை அலையாக மக்கள் பளையை நோக்கிப் படையெடுத்தனர்.

ஆங்காங்கே வரவேற்பு வளைவுகளும் பதாகைகளும் விழாவுக்கு வருவோரை வரவேற்றன.

விழா நடந்த இடம் தமிழனின் வீரத்திற்கே சிறப்பாக அமைந்த பின்னணியைக் கொண்டது. ஆம்! அரச படைகள் அங்கு 11ஆட்லறிப் பீரங்கித் தொடர்களை அமைத்து ஷெல் மழை பொழிந்துகொண்டிருந்தபோது அதனை இரு கரும்புலிகள் தாக்கி அழித்த இடம் அது.

மேஜர் தனுசன், மேஜர் சுதாஜினி ஆகிய இரு கரும்புலிகளும் தமது உடலில் வெடிசுமந்து எதிரி படைகளின் ஆட்லறி தொடர் நிலைகள் மீது பாய்ந்தழித்த அந்தப் பிரதேசத்தில்தான் வெற்றி விழா நடைபெற்றது.

களமுனைத் தளபதிகள், போராளிகள, பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் அங்கு திரண்டிருக்க தேசியகொடி ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

ஆனையிறவைப் புலிகள் கைப்பற்றியவேளை அங்கு தேசியக் கொடியை ஏற்றிய மூத்த தளபதி கேணல் பானு வெற்றி விழாவிலும் கொடியை ஏற்றினார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து அங்கு மற்றுமொரு முக்கியமான நிகழ்வு இடம்பெற்றது. ஆட்லறி நிலைகள் மீது கரும்புலித் தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த மேஜர் தனுசன், மேஜர் சுதாஜினி ஆகியோரின் நினைவாக அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கல்லை அவர்களது தந்தையர்கள் இணைந்து திறந்து வைத்தனர். பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் அந்தக் கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். தளபதிகளும் போராளிகளும் மலரஞ்சலி செலுத்தினர்.




தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஆகியோர் காலை அமர்வின் போது உரையாற்றினர்.

மைதானத்தின் ஒருபுறத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தலில் போராயுதங்களின் கண்காட்சி இடம்பெற்றது.

சண்டைகளின்போது படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆட்லறிப் பீரங்கிகள் உட்பட பல ஆயுதங்கள் அக்கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆயுதங்கள், அவற்றின் பயன்பாடுகள், வகைகள் மற்றும் அவற்றை இயக்கும் முறைகள் என்பன பற்றி போராளிகள் விளக்கமளித்தார்கள்.

அத்துடன், ஆனையிறவுத் தளம்




மீதான வெற்றித் தாக்குதல் மற்றும் தீச்சுவாலை முறியடிப்புச் சமர் போன்றவற்றில் விடுதலைப் புலிகளின் ஊடறுப்புக்கள், ஊடுருவல்கள, வழிமறிப்புத் தாக்குதல்கள் என்பன எப்படி அமைந்தன என்று பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இவற்றைப் பார்வையிடுவதற்கு மக்கள் கூட்டம் காலை முதலே அலைமோதியது.

நீண்ட வரிசையில் காத்து நின்று அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள் மக்கள். அவ்வாறு பார்வையிட்டவர்களில் இளைஞர்கள் பெரும்பாலும் விளக்கம் எதனையும் கேட்கத் திராணியற்று தலையைக் குனிந்தவாறு நகர்ந்ததை அவதானிக்க முடிந்தது. ஆயுதக்கண்காட்சியில் மிடுக்குடன் விளக்கமளித்துக் கொண்டிருந்தவர்கள் பெரும்பாலும் பெண் போராளிகள்.

ஆம்! அன்று அடுக்களைக்குள் அகப்பையை மட்டுமே ஏந்திக்கொண்டிருந்த ஈழத்தமிழ்ப் பெண்ணினம் காலத்தின் தேவையை உணர்ந்து ஆயுதம் ஏந்தி கடற்புலிகளாய், தரைப்புலிகளாய், கரும்புலிகளாய் உலகையே வியக்க வைத்துக் கொண்டிருக்கும் போது, அவர்கள் முன்னால் இனத்திற்காக ஒரு புல்லைக்கூட கிள்ளிப் போடாத இளைஞர்கள் தலைகுனிந்ததில் ஆச்சரியமில்லைத்தான்.

### மாலை நிகழ்வு

வெற்றிவிழாவின் மாலை அமர்வுக்கு அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தலைமை தாங்கினார்.

மைதானம் நிறைந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் போர்முனைத் தளபதிகள், அரசியல்துறை பிரமுகர்கள் வீற்றிருக்க புலிகளின் படையணிகளின் அணிவகுப்பு வந்தன. பிற்பகலில் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, மாலதி படையணி, சோதியா சிறுத்தைப் படையணி, காவல்துறை அணி, குட்டிசிறி பீரங்கிப் படையணி என்பன தமக்கே உரிய சீருடைகளுடன் வெவ்வேறு விதமான ஆயுதங்களுடன் அணிவகுத்து வந்த காட்சி பார்ப்போரை மெய்சிலிர்க்க வைத்தது.

அணிவகுப்பு நிறைவடைந்தவுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்த இரண்டு மேடைகளில் ஒன்றில் கலை நிகழ்வுகளும் மற்றையதில் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதான குடாரப்புத் தரையிறக்கம் குறித்து பெருமிதம் அடைந்தார்.

உரைகளும் கலை நிகழ்வுகளும் மாறி மாறி இடம்பெற்றன. ஆனையிறவுத் தள தகர்ப்பின்போது தனது கால் ஒன்றை இழந்த பெண் போராளி ஒருவர் பாடல் ஒன்றுக்கு நடனம் ஆடினார்.

செயற்கைக்கால் பொருத்தியுள்ள அந்தப் போராளி நடனமாடிய போது அங்கிருந்த அனைவருமே வியந்து பாராட்டினார்கள். செயற்கைக் காலுடன் தான் நடனம் ஆடுகின்றார் என்று கூறமுடியாதளவுக்கு அவரது நடனம் அமைந்திருந்தது.

கலைபண்பாட்டுக் கழக கலைஞர்கள் வழங்கிய 'சங்கநாதம்' என்ற சிறப்பு நிகழ்ச்சி அனைவரையும் பரவசப்படுத்தியது. தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்ட அந்த நிகழ்வை அடுத்து சோதியா சிறுத்தைப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா சிறப்புரையாற்றினார்.

களங்கள் பல கண்டு வெற்றி வாகைசூடிய மகளிர் படையணிகளில் ஒன்றான சோதியா சிறுத்தைப் படையணியின் சிறப்புத் தளபதியான துர்க்கா சண்டைக் களங்களிலே பணியாற்றும் வாகனப் பிரிவு, மருத்துவப் பிரிவுப் போராளிகளின் உன்னத பங்களிப்பை தனது உரையிலே மெச்சினார்.

ஆனையிறவுத் தளத்தை மீட்ட வெற்றிச் சமரையும் தீச்சுவாலை முறியடிப்பு நடவடிக்கையையும் திட்டமிட்டு வழிநடத்திய தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு தமிழர் தாயகத்தின் பல மாவட்டங்களில் இருந்தும் கொண்டுவரப்பட்ட வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன.

தலைவருக்கான கேடயங்களை களமுனைத் தளபதிகளான கேணல் சூசை, கேணல் ஜெயம், கேணல் கடாபி, கேணல் விதுஷா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தந்தை ஒருவர் தலைவருக்கான வீரவாளை தளபதி கடாபியிடம் கையளித்தார்.

கலை நிகழ்வுகள் வரிசையில் மாலதி படையணிப் போராளிகளின் நாடகம் மற்றும் நடன நிகழ்வுகள் அரங்கேறின. போர்ப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த கலைஞர்களின் கவியரங்கமும் இடம்பெற்றது.

போராளிகளில் சிறந்த கவிஞர்களும் இருக்கின்றார்கள் என்பதைக் கண்டு வியக்காமல் இருக்கமுடியவில்லை.

அவர்கள் ஒவ்வொருவரும் ஆனையிறவுப் படைத்தளத்தின் வெற்றியின் அத்திவாரக் கற்களான மாவீரர்களின் நினைவுகளை தம் கவிதைகளில் துதித்தனர்.

மாவீரர்களின் நினைவினாலேயோ என்னவோ தன்பங்கிற்கு வானமும் கண்ணீராக மழைபொழிந்தது.

கொட்டும் மழையில் நனைந்தவாறு மக்களும் போராளிகளும் அந்தந்த இடத்திலேயே அமர்ந்திருந்தார்கள். வெற்றிப் பெருமிதத்தில் ஊறிப் போயிருந்தவர்களுக்கு மழை ஒரு பொருட்டாகத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தானே?

மழை ஓய்ந்து மீண்டும் கவியரங்கு தொடர்ந்தது. கடற்புலி, தரைப்புலி, புலனாய்வுத்துறை போன்ற பிரிவுகளைச் சேர்ந்தோரின் கவி வரிகள் முற்றுப்பெற்றன. அடுத்து கவிபாட எழுந்த ஒரு புலிமறவனை அருகில் வந்து காண்பதற்கும் அவனது கவிதையை அருகில் நின்று செவிமடுப்பதற்கும் மக்கள் கூட்டம் முண்டியடித்து எழுந்தது.

அங்கு எழுந்த மக்கள் கூட்டத்தை அடக்குவதற்கு காவல் துறையினர் அரும்பாடுபட்டனர்.

ஆம்! தனது உடலில் வெடிசுமந்து தனது மக்களுக்காக எந்த வேளையிலும் வெடித்துச் சிதறுவதற்கு தயாராக இருந்த ஒரு கரும்புலி வீரன் கவிபாட வந்து நின்றான். தனது படையணிக்கே உரித்தான கறுப்புநிற வரி உடையுடன் ஒலிவாங்கியின் முன்னால் வந்து நின்ற அந்த 'இரும்பு மனிதன்' தனது



கவிவரிகளை மீட்கத் தொடங்கினான்.

தன்னுடன் பாசறையில் கூடவே இருந்து உறவாடி - தங்களிடம் விடைபெற்று வந்து ஆனையிறவிலே வெடித்துச் சிதறிய தனது தோழர்களின் நினைவுகளை கவிதையில் மீட்டினான் அந்தக் கரும்புலி வீரன்.

இதுவரைகால ஆனையிறவுப் போரிலே வீரகாவியம் படைத்த கரும்புலிகள் ஒவ்வொருவரது பெயரையும் கூறி அவர்களின் நினைவுகளை மீட்டுக்கொண்டிருக்கையில் அந்த மறவனின் கண்களிலும் நீர் முட்டியது.

"கல்லுக்குள்ளே ஈரமுண்டு கசிவதுமுண்டு கரும்புலிகள் விழிகளில் நீர் வழிவதுமுண்டு" என்ற கவிஞர் புதுவையின் பாடல் வரிகள் அங்கே காட்சியாகின.

கிளிநொச்சி, பரந்தன் தொடக்கம் ஆனையிறவு, பளை வரை காவியமான கரும்புலிகளை ஒவ்வொருவராக நினைவில் மீட்டிய அந்த வீரனின் கவிவரிகள் இறுதியாக பளையில் - வெற்றி விழா நடந்த மைதானத்தில் - படையினரின் ஆட்லறிகளைத் தகர்த்த மேஜர் தனுசன், மேஜர் சுதாஜினி ஆகிய இரு கரும்புலிகளை நினைவில் நிறுத்தியது.

"நீங்கள் குந்தியிருக்கின்ற இந்த மைதானத்தின் மணலை உங்கள் கைகளால் சற்றுக் கிளறிப் பாருங்கள். சில வேளைகளில் இங்கு வெடித்துச் சிதறிய என் தோழர்களின் உடல் துண்டங்களைக் கண்டெடுப்பீர்கள்..." என்று அந்தக் கரும்புலி வீரன் கவிதை வாசித்தபொழுது அங்கிருந்தோர் - குறிப்பாக தாய்மார்கள் - வாய்விட்டுக் கதறி அழுததைக் காணமுடிந்தது.

கவியரங்கத்தினைத் தொடர்ந்து சோதியா சிறுத்தைப் படையணியினரின் நாடகம் இடம்பெற்றது. குடாரப்புத் தரையிறக்கத் தாக்குதலில் இடம்பெற்ற உண்மைச் சம்பவம் ஒன்று அங்கே நாடகமாக்கப்பட்டிருந்தது. தாக்குதல் ஆரம்பமாகி ஒரு கட்டத்தில் இராணுவத்தினரின் அருகில் நின்றுகொண்டு சமராடிக் கொண்டிருந்த பெண் போராளி ஒருவர் தான் நின்ற இடத்துக்கு சமீபமாக இராணுவத்தினர் நின்று கொண்டிருக்கின்றார்கள் எனவும் -

எனவே, தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் அந்த இடத்துக்கு ஷெல் அடிக்குமாறு 'வோக்கி'யில் தனது ஆட்லறிப் பிரிவினருக்கு கூறியதையும் அடிநாதமாகக் கொண்டு அந்த நாடகம் அமைக்கப்பட்டிருந்தது.

அந்த இடத்தில் ஷெல் விழுந்தால் தானும் வீரச்சாவடைய நேரிடும் என்று உறுதியாகத் தெரிந்திருந்தும், அதன்மூலம் ஏராளமான இராணுவத்தினரைக் கொல்லமுடியும் என்பதால் ஷெல் அடிக்குமாறு கூறி வீரச்சாவை அணைத்துக்கொண்ட அந்தப் பெண் புலியின் தியாகம் - துணிவு - வைராக்கியம் வானளாவ உயர்ந்து நிற்பதைப் பார்த்து ஆச்சரியத்தில் உறைந்தேபோனது மக்கள் கூட்டம்.

**மஞ்சுதன்**

இப்படியும் பெண்களா...? இவர்கள் வாழ்ந்த காலத்தில் - அவர்கள் வாழுந்த தேசத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோமே என்று நினைத்தபோது வந்திருந்த அனைவருக்கும் பெருமையுணர்வு மேலிட்டது.

இதுபோல இன்னும் எத்தனை எத்தனை வரலாறுகள்... தியாகங்கள்...?

இவையெல்லாம் எமது எதிர்கால சந்ததியின் பாடப் புத்தகங்களில் இடம்பெறவேண்டியது மிகவும் அவசியமானதாகும். தொடர்ந்து மேலும் பல கலை நிகழ்ச்சிகளும் மூத்த தளபதிகளான கேணல் பானு, கேணல் தீபன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன. ஆனையிறவுத் தாக்குதல் மற்றும் தீச்சுவாலை முறியடிப்புச் சமர் என்பவற்றை வழி நடத்திய இந்த தளபதிகள் ஒவ்வொருவரும் களமுனை அனுபவங்கள், அனுபவித்த கஷ்டங்கள் மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தலைவரின் தந்திரோபாய உத்திகள்... எப்படி அமைந்திருந்தன என்பன குறித்து தமது உரையில் விளக்கினார்கள்.

இறுதியாக மட்டக்களப்பு பாடுமன் இசைக்குழுவினரும் யாழ்அருணா இசைக்குழுவினரும் இணைந்து நடத்திய இசை நிகழ்வும் இடம்பெற்றது.

ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் தலைகளை நிமிரவைத்த ஒரு மாபெரும் வெற்றியின் நினைவு விழாவில் கலந்துகொண்ட திருப்தியுடன் மக்கள் அனைவரும் மறுநாள் காலை தத்தமது இடங்களுக்குத் திரும்பினார்கள். ★

# தமிழ் மாணவர்களின் கல்வி மீதான திட்டமிட்ட அழிப்பு தொடர்கின்றது

## தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் கவலை

திருகோணமலை,மே5

தமிழ் மாணவர்களின் கல்வியைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

- இவ்வாறு கவலை தெரிவித்திருக்கிறார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி.தண்டாயுதபாணி.

சங்கத்தின் மேதினக் கூட்டம் திருமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், கல்வி கலாசார செயலர் நா.ராஜநாதன், சங்கத்தின் திருமலைக்கிளை அங்கத்தவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு சி.தண்டாயுதபாணி மேலும் தெரிவித்ததாவது:-

தற்காலத்தில் மே தினச் செயற்பாடுகள் பெருமளவில் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களை விட வேகமாகவும், பெரியளவிலும் மேதினச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. ஆனால், தொழிற்சங்கங்கள் சுதந்திரமாகச் செயற்படவேண்டும் என்பது தொழிற் சங்கங்களின் அடிப்படை விதியாகும். எமது நாட்டில் இது மாறியே காணப்படுகிறது.

"இலங்கையில் பிரதான கட்சிகள் தொழிற்சங்கங்களை அமைத்துக் கொண்டு செயற்படுகின்றன. எமது நாட்டில் மட்டுமின்றி ஆசிய நாடுகளில் இத்தகைய போக்கு பெரிதும் காணப்படுகிறது."

"இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எந்த அரசியல் சார்பும் இன்றி செயற்படும் சுதந்திரத் தொழிற்சங்கம். ஆனால், சில காலங்களில் சில கட்சிகளின், சில குழுக்களின் கருத்துக்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. எவ்வாறெனில் சமூக ரீதியிலான, பொதுவிடயங்கள் தொடர்பான கருத்துக்கு நாம் ஆதரவு தெரிவிக்கின்றோம்.

"தொழிற்சங்கமானது தனது அங்கத்தவர்களுக்கான பிரச்சினைகளை தொழில் வழங்குநருடன் பேரம் பேசிப் பெற்றுக்கொள்ளும் சக்தியை கொண்டிருக்க வேண்டும்.

"இன்று எமது நாட்டில் தமிழ் ஆசிரியர்களுக்கு பலவகையான - தொழில் ரீதியிலான, பாரபட்சங்கள் காட்டப்படுகின்றன.

"தமிழ் மாணவரின் கல்வியைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

"போர் சூழலில் உள்ள பிரச்சினைகள், பதவி நியமனங்கள், பௌதிக வளங்களில் பாரபட்சம் என்பன தொடர்கின்றன. இதற்கு போர் சூழல் காரணமாக இதுவரை கூறினார்கள். தற்போதைய அமைதிச் சூழலிலும் கூட மாற்றமேதும் ஏற்படவில்லை.

"சில அரசசார்பற்ற அமைப்புகள் மூலம் சில வகையான ஊக்குவிப்புக்கள் எமது பாடசாலைகளுக்கு கிடைக்கின்றன. அரசு இதுவரை எமது பாடசாலைகள் தொடர்பில் காட்டும் அசமந்தம் குறித்து எமது விசனத்தை தெரிவிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். அண்மையில் நாம் நடத்திய தொழிற்சங்க போராட்டமும் அதன் பின்னணியும் உங்களுக்குத் தெரியும். தொண்டராசிரியர் பிரச்சினைகள், அவை கையாளப்படும் நிலைமைகள் தொடர்பாக உள்ள நிலை என்பன அதில் குறிப்பிடத்தக்கவை.

"இவ்வாறான நிலைமைகளில் தான் எமது சங்கத்தின் கூட்டுப் பேரம் பேசும் தன்மை முக்கியத்துவம் பெறுகின்றது" - என்றார் அவர். (ஐ)

## வெங்காயப் பயிரில் பழுப்பு நோய்

அராலி,மே.5

அண்மையில் பெய்த மழை காரணமாக வெங்காயப் பயிரில் ஒருவித பழுப்பு நோய் பரவி வருகின்றது. பொதுவாக வலிகாமப் பகுதிகளில உள்ள பயிர்களிலே இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக வலி.கிழக்குப் பிரதேசங்களான அச்சுவேலி, ஆவரங்கால், ஈவினை, தோப்பு, புத்தூர் போன்ற இடங்களிலுள்ள பயிர்களில் இந்நோயின் தாக்கம் காணப்படுகின்றது.

இதேவேளை வலி.மேற்குப் பிரதேசங்களில் மிளகாய்ச் செடிகளில் 'தூக்க நோய்' ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-14)


## துயர் தீராத நெஞ்சோடு உனக்கெங்கள் அஞ்சலி



இருவரது மடியில் 1973.06.01

இறைவனது அடியில் 2003.04.29

**அமரர் இராசரத்தினம் வரதராஜன்**

மணக்கோல வாழ்த்துக்கள் தரநின்ற நாமுந்தன்
பிணக்கோலச் சேதியை அனுப்பவா இறை வைத்தான்
எப்படி ஆறுவோம் எப்படித் தேறுவோம்
இப்படி விதியுன்னைத் தொட்டது ஏனையா?
உன் ஆத்ம சாந்திக்கான எம் நெஞ்சில் நீ இருக்க
எமது கண் நீரினால் தருகிறோம் அஞ்சலி!

இராசேஸ்வரன் குடும்பம்,
சங்கரப்பிள்ளை குடும்பம்,
செல்வராசா குடும்பம்,
ஜலீஸ் மாஸ்ரர் குடும்பம்.

*79/2, றக்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (17549)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 - 09 - 1933



அம்பாள் அடியில் 05 - 04 - 2003

திருமதி
**சுப்ரமணியம் அன்னசோதிப்பிள்ளை**

அன்போடு பேசி ஆதரவாகப் பழகி
எம்மையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

*3ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.* (17539)



## தொழிலாளர் தேவை

1) மேசன்
2) கூலித் தொழிலாளர்

தகுதியுடையோர்கள் உடன் நேரில் சமுகந்தரவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்

**திட்டப்பொறியியலாளர்,**
**கல்வியியற்கல்லூரி**
**நிர்மாணம் - கட்டம் 2.**
**இராசவீதி, கோப்பாய்** (17505)



## பணிநிலை வெற்றிடம்

சமையலாளர் , சமையல் உதவியாளர் போன்ற பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் 2003..05.20 ஆம் நாளுக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

**தகைமை** :- உணவு வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு** :- திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.

**நடுவப்பணியகம்,**
**ஆயப்பகுதி, கிளிநொச்சி.**

(சி-27697)


# வழியறியாது தடுமாறிய முதியவர் கிளிநொச்சி மூதாளர் இல்லத்தில்!



தம்பையா வைரமுத்து

கிளிநொச்சி,மே.5

கிளிநொச்சியில் செல்லும் இடம் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த தம்பையா வைரமுத்து என்ற முதியவரை காவல்துறையினர் கிளிநொச்சி மூதாளர் இல்லத்தில் பராமரிப்புக்காகச் சேர்த்துள்ளனர். சுமார் 90 வயது மதிக்கத்தக்க இந்த முதியவர் கடந்த முதலாம் திகதி புளியங்குளம் சோதனைச் சாவடியிலிருந்து கிளிநொச்சிக்குப் பஸ்ஸில் வந்து சேர்ந்ததாக காவல் துறையினர் தெரிவித்தனர். இவ்வயோதிபரின் உறவினர்களோ அல்லது அவரைத் தெரிந்தவர்களோ உடனடியாக கிளிநொச்சி காவல்த்துறைப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி காவல் துறையினர் கோரியுள்ளனர். (ஒ)

# றோட்டறக்ட், இன்ரறக்ட் கழக விருது வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,மே5

றோட்டறக்ட் மற்றும் இன்ரறக்ட் கழகங்களில் சிறந்த சேவை புரிந்தோர்க்கான விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன் கிழமை இடம்பெற உள்ளது. இவ் விருதுக்குத் தகுதியானோரைச் சிபாரிசு செய்து, அவர்களது பெயர் விவரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு மேற்படி கழகங்களை யாழ். றோட்டறிக் கழகத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு றோட்டறக்ட், இன்ரறக்ட் கழகங்களிலிருந்தும் விருது பெறத் தகுதியான சேவையாளர்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், யாழ்ப்பாண றோட்டறிக் கழகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-12)


## பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம் வவுனியா

**சாயி சிறுவர் இல்ல காப்பாளர் (Warden) பதவி**

வவுனியா, கூமாங்குளத்தில் அமைந்துள்ள சாயி சிறுவர் இல்லத்துக்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1) 40வயதுக்குக் குறையாமல் 60வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
2) க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத்தக்கது.
3) சிறுவர் நிலையத்தில் நிரந்தரமாகத் தங்கி கடமை புரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
4) சிறந்த நல்லொழுக்கம், இரக்க சுபாவம், சேவை மனப்பான்மை உடையவராக இருத்தல் வேண்டும்.
5) சத்ய சாயி நிலையங்களின் ஒழுக்க விதிகளை கடைப்பிடிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

02) விண்ணப்பங்கள் சுயவிவரத்துடன் (Bio Data) 2003.05.24ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியவாறு கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
"சாந்தம்"
பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்,
வவுனியா.

03) தெரிவு செய்யப்படின் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சி.இரகுநாதபிள்ளை
தலைவர்
*பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்,*
*வவுனியா.*

*சாந்தம்,*
*வவுனியா.*
*2003.05.05* (C-27700)


## மரண அறிவித்தல்கள்

### கனகசபை சண்முகநாதன்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சண்முகநாதன் அவர்கள் நேற்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கனகசபை தம்பதிகளின் அன்பு மகனும் ரட்ணேஸ்வரியின் சகோதரனும் காலஞ்சென்ற இராமஜெயத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2003) திங்கட்கிழமை 4மணிக்கு மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவமயம் (சகலி)

*சித்தன்கேணி.* (17542)

### திருமதி மகேஸ்வரி இராஜநாயகம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இராஜநாயகம் நேற்று (04-05-2003) ஞாயிறு அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செட்டியார் - வள்ளியம்மை ஆச்சியின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற இராஜநாயகத்தின் அன்பு மனைவியும் ஆறுமுகம், கதிர்வேல் பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராணி (லண்டன்), நிர்மலா (நியூஸிலாந்து), பத்மா (கனடா), சாமளா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தடபத்மநாதன் (லண்டன்), சிபத்மநாதன் (நியூஸிலாந்து), நகுந்தரலிங்கம் (கனடா), வி.சிவஞானலிங்கம (கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில் கிழக்கு இல்லத்தில் நடைபெறும் அது பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.பஞ்சாட்சரம் (சகோதரர்),
த.பத்மநாதன் (மருமகன்).

*628/5, கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார்கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.* (17546)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 470 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
|---|---|---|
| திகதி | 02.05.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5886373-5899632 |

வெற்றி இலக்கங்கள் **19 21 22 36**

லக்கினம் மேடம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 275,102 | 10 | 2,751,020 |
| 2 இலக்கங்கள் | 25,270 | 20 | 505,400 |
| 1 இல + லக்கினம் | 24,947 | 30 | 748,410 |
| 2 இல + லக்கினம் | 2,278 | 100 | 227,800 |
| 3 இலக்கங்கள் | 667 | 500 | 333,500 |
| 3 இல + லக்கினம் | 55 | 5,000 | 275,000 |
| 4 இலக்கங்கள் | 02 | 100,000 | 200,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 328,322 | - | 6,041,130 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,041,130/-

தொடர் இல. 4904239க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 மே 06ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5890853-3-76
5888064-0-15
5890892-5-11
5898685-7-51
5889470-1-02

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3603110 இருந்து 3619431 வரை
சீட்டிழுப்பு இல. 1397
திகதி 03.05.2003

வெற்றி எண்கள் **14 24 35 46 50**

போனஸ் எண் **53**

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 103 | 10,000/- | 1,030,000/- |
| 3 | 5,221 | 500/- | 2,610,500/- |
| 2 | 85,788 | 20/- | 1,715,760/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 14ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 104,559 | 10/- | 1,045,590/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,701,850/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 2,310,950/-

தொடர் இல. 2620127க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 மே 07ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3607592-2-22
3610562-7-21
3609397-0-63
3610381-0-59
3606881-7-49

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



## சுடர் ஒளி 11.05.2003 இதழில்

விலை 16 /=




- தடையகலா ஏக்கத்துடன் மக்கள் முகாமமைக்க முனைகின்ற படைகள்
- இராணுவ உளவாளிகள் கொலை மர்மம் நீடிப்பு; அரசுக்கு சவால்
- ஆனையிறவு மீட்பு நிகழ்வு நினைவில் பதிந்த வரலாறு
- திருமலை மாணவி மதுரையில் படுகொலை வேலியே பயிரை மேய்ந்த கொடுமை
- ஆயுதங்கள் உரிமைகளை பாதுகாக்காது! படைக்கட்டமைப்பு பிணக்கை நீடிக்குமாம்!
- அடக்கியாள்வோர் நினைக்கும் வழிமுறையும் மக்களுக்காக துயர் சுமக்கும் தலைமுறையும் (தேரடி)
- விரிசலை ஏற்படுத்த முனையும் சக்திகள் புரிந்துணர்வு மனநிலையில் சமூகங்கள்
- அதிசயம்! ஆனால் உண்மை!! (நவீன - வியத்தகு - தகவல்களுடன் கூடிய பக்கம் )

மற்றும் அரசியல் அம்பலம், திருகோணேஸ்வர திருத்தல யாத்திரை, இணையத்தளங்களிலிருந்து...., க்ரைம் டயறி, மசாலா மிக்ஸ், பித்தன் பதில்கள், சொற்சிலம்பம், கவிதைப் புனல், சினிமா, பெண், மலையகக் கண்ணோட்டம், இளஞ்சுடர், சதாம் தொடர், அலைகளின் காவியம், ராசிபலன், கலையமுதம், விளையாட்டு... இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

# சிந்துவெளி முதல்...



"...சிந்துவின் பிள்ளைகள் வளர்த்த கலைகள், நகரங்களெங்கும் பரக்கக் காணப்பட்டன. செழிப்பான வாழ்வின் அடையாளங்கள் அவை. மொழி, பண்பாடு, சடங்குகள் இவற்றோடு மனிதநேயம் அங்கு இழையோடியிருந்தது. அங்கேயும் அவலம் வந்தது. சீரான வாழ்வு சீர்குலைக்கப்பட்டது.

நகரம் அழிக்கப்பட்டது. சிந்துவின் பிள்ளைகளும், வளர்த்த கலைகளும் சிதைக்கப்பட்டன. பிள்ளைகள் சிதறி ஓடினர். வாழ்விடம் தேடினர். பல மணற் பரப்புகள் புகலிடம் கொடுத்தன. அங்கே பிள்ளைகளின் வாழ்வும் கலையும் மீளவும் வளர்ந்தது. ஈழத்தின் வட புலத்தில் கந்தரோடையில் சிந்துவின் பிள்ளைகளின் கரங்கள், பாதங்கள் பட்டு மண்பிசைமீட்பட்டு கதிரமலை அரசு..."

இற்றையிலிருந்து ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன் இந்துநதிப் பள்ளத்தாக்கை அண்டி இரு பெரு நகரங்கள் காணப்பட்டதாக கூறப்படுகின்றது. 1921 இற்கு முன்னர் ஒருவராலும் அறியப்படாத இந்த நாகரிகம் பூமிக்கடியில் இருந்தது.

தென்னாசியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொண்டதன் அடிப்படையில் வடமேற்கு இந்தியாவில் கராச்சி, லாகூர் புகையிரத வீதி அமைப்பின் போது பூமிக்கு அடியில் இருந்த இந் நாகரிகம் மேற்தரைக்கு



வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

ஜோன் விரண்டர், வில்லியம் ஆகியவர்களான பொறியியல் துறையைச் சேர்ந்த இரு சகோதரர்களால் புகையிரத பாதை அமைப்பின் போது இந்நாகரிக எச்சம் முதன்முதல் வெளிக் கொணரப்பட்டது. இதனைத் தொடர்ந்தே 1921 இல் இருந்து 1932 வரை உள்ள காலப்பகுதியில் சேர் ஜோன் மார்ஷல் தலைமையில் சேர் வில்லியம் யோன்சு (1746 - 94) சேர் அலெக்சாந்தர் கன்னிங்காம் (1814 - 93) சேர் ஆர்.பாண்டார்கர் (1837 - 1925) மற்றும் இந்திய தொல்பொருளாய்வாளர்களால் மொகஞ்சொதாரோ, ஹரப்பா ஆகிய இரு பெரும் நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றோடு குறைந்த பட்சம் மூன்று சிறு பட்டணங்களும் கண்டு அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டது.

இந்த அகழ்வாராய்ச்சியின் போது ஏறக்குறைய 1800 பெண் தெய்வச் சிலைகள் 600 இற்கு மேற்பட்ட துளையிடப்பட்ட தாயத்துக்களும் 2000 இற்கு மேற்பட்ட சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இது தவிர நடராசர் சிலை, சோமாஸ்கந்த வடிவமுள்ள சிலை, யோகியின் உருவம், மூன்று கொம்புடையதாக ஒரு கடவுளின் வடிவமும் கண்டெடுக்கப்பட்டன.

அவற்றைக் கொண்டு சிந்து வெளிப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட கலைவடிவங்களை நோக்குகையில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை, மண்பாண்டக்கலை ஆகிய கலைகள் இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருந்தமை புலனாகின்றது.

சிந்துவெளி மக்கள் அமைத்த கட்டடங்களில் எந்தவிதமான அலங்கார வேலைப்பாடுகளின்றி உருவாக்கப்பட்ட தன்மையைக் காணலாம். "வாழ்வதற்காகவே வீடு" என்ற கோட்பாட்டை பின்பற்றி சிந்துவெளி மக்கள் தத்தமது இல்லங்களை அமைத்ததாக எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் இங்கு கட்டப்பட்ட கட்டடங்கள் யாவும் தேவையை நிவர்த்தி செய்தால் போதும் என்ற வகையில் கட்டப்பட்டதாக தெரிகிறது. ஆனாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படுவது போன்ற ஒரு கற்பனைத் தோற்றத்தை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இதுவரை அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட கட்டடங்களில் மிகவும் பெரியது மொகஞ்சோதாரோவில் காணப்

# கந்தரோடை வரை...!

படுகிறது. 230 x 78 அடி வெளிமட்டப் பரப்புக் கொண்ட இக் கட்டடம்

## ஒரு கலைப்பார்வை

ஓர் அரண்மனையாக இருந்திருக்கலாம் என [illegible]. மற்றும் ஹரப்பாவிலே பெரும் தானியக் களஞ்சியம் ஒன்று காணப்படுவது இக்காலத்து கட்டடக் கலையில் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தானியக் களஞ்சியமானது வெள்ளப்பெருக்கால் அழிவுறாத வண்ணம் ஏறத்தாழ 150 x 200 அடி பரப்புக் கொண்ட ஒரு மேடைமீது கட்டப்பட்டு ஒவ்வொன்றும் 50 x 20 அடி கொண்ட பல களஞ்சிய அறைகளாகப் பிரிக்கப்பட்டும் உள்ளது. உழவரிடம் நில வரியாகப் பெற்ற தானியத்தை சேர்த்து வைப்பதற்கே இத் தானியக் களஞ்சியம் பயன்பட்டதென அறியப்படுகிறது. இதே போன்ற தானியக் களஞ்சியங்கள் மொகஞ்சதாரோவில் மேலும் காணப்படுவதாக அறிகிறோம்.

இவை தவிர கட்டடக்கலை என்ற வகையில் தனி சிறந்து விளங்குவது மொகஞ்சதாரோ நகரப் பகுதியில் உள்ள குளிக்கும் இடமாகும். இந் நீராடுதுறையானது 39 x 23 அடி பரப்பும் 8 அடி ஆழமும் கொண்ட செவ்வக வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இதைச் சூழ நாற்புறமும் மூடப்பட்ட ஒரு நடைவழி அமைந்திருக்கின்றது. அத்துடன் இதனைச் சூழ சிற்றறைகள் இருந்ததாக அடையாளங்கள் இருப்பதும் இது குருமாரின் உறைவிடமாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.




இது மட்டுமல்ல இங்கு வாழ்ந்த மக்கள் கட்டடக் கலையினூடாக சுகாதார நலனையும் பேணிவந்திருப்பதை அறிகிறோம். ஏனெனில் உலகில் வேறெந்த பண்டை நாகரிகமும் இத்தகு திறமைவாய்ந்த வடிகாலமுறை ஒன்றைக் காணாத விதத்தில் இக்கால மக்கள் இதனைச் செயன்முறைப்படுத்தி இருப்பதை காணலாம். இக் கட்டடங்கள் யாவும் செங்கற்களாலேயே கட்டப்பட்டுள்ளது.

இக்கால மக்களிடத்தில் நிலவிய சிற்பக்கலையினை ஆராயும்போது சிந்துவெளி மக்களுடைய அழகியல் உணர்வையும் கலைக் கோட்பாடுகளையும் எமக்கு மிகத் தெளிவாகப் பிரதிபலிப்பது அவர்களால் உருவாக்கப்பட்ட சிற்பங்களும் மட்பாண்டங்களுமாகும். சிந்து வெளிமக்கள் எடுத்த எடுப்பிலேயே தனி நின்று சிற்பக் கலை (முப்பரிமாண) பாண்டித்தியம் பெற்றிருந்தமையை களிமண்ணினால் செய்யப்பட்ட சிற்பங்களில் இருந்தும்



அறிய முடியும்.

சிந்துவெளி முத்திரைகள் மீது பதிக்கப்பட்ட உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகிறது. முதன் முதலில் புடைப்புச் சிற்பங்க

**சத்தியசீலன் ஜெயவாணி**

ளும் தனி நின்ற சிற்பங்களையும் உருவாக்கிய பெருமை இந்தியாவில் சிந்துவெளி மக்களையே சாரும்

அவ்வகையில் எமக்கு கிடைத்துள்ள 10 000 இற்கு மேற்பட்ட முத்திரைகள் மீது பதிக்கப்பட்ட உருவங்களும் பெண்கடவுள்களுடைய எண்ணற்ற உருவங்களும் அவர்களது உயர் தோற்ற இயல்பைக் கொண்ட முண்டங்களும், செம்பிலே வார்க்கப்பட்ட வார்வைச் சிலைகளும் இவற்றிற்கு சான்றாதாரமாகின்றது.

மனித உருவங்களை சிலைகளாக்கும் பொழுது இயல்பான அசைவுகளுடன் அவற்றை உருவாக்கியிருப்பது மனித உடற் கூற்றியல் அமைப்பு தொடர்பாக சிந்துவெளி மக்கள் ஆழ்ந்த அவதானிப்புடன் இருந்திருப்பது புலனாகிறது.

சுண்ணாம்புக் கல்லினால் செய்யப்பட்ட ஆண்மகனுடைய.....(வளரும்)


# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

வாழ வந்தது
22 - 07 - 1984



வாழாது சென்றது
22 - 03 - 2003

## அமரர் கந்தசாமி சுஜீந்தன்

அன்பு மொழி பேசி ஆதரவு காட்டி வாழ்ந்து
இன்ப வாழ்வை விடுத்து விண்ணுலகு சென்றதேனோ?
சிரித்த முகத்துடனே வரும் சுஜீந்தனே ~ காலன்
விரித்த வலையில் அகப்பட்டது விதியின் சதிதானோ?

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக நடைபெறும் ஞாபகார்த்த அஞ்சலி நிகழ்வும் வீட்டுக்கிருத்தியமும் நாளை(06-05-2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(17540)

- குடும்பத்தினர்.



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




### செல்வி நிருத்திகா திருவருட்செல்வன்

இணுவிலைச் சேர்ந்த திருவருட்செல்வன் யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த நளினி தம்பதிகளின் செல்வப்புதல்வி நிருத்திகா தனது முதலாவது பிறந்த நாளை பிரான்ஸில் இன்று (05-05-03) குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, நிருபன் அண்ணா, நிவேதன் அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், கம்சிகா மச்சாள், ஜனார்த்தனன் மச்சான், சௌமியா மச்சாள், சுஜீவன் அண்ணா, சுஜானனன் அண்ணா, பிரான்ஸில் உள்ள வாசனன் தாத்தா குடும்பம், பாட்டி, பூட்டிமார் எல்லோரும் தேப்பு மாணிக்கப்பிள்ளையார் அருளினால் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றனர்.

இ.டாமானந்தம்
13A, சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.

(17544)

-சித்தி.



## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தாரா
**பனங் கற்கண்டு இருமல் பாணி**

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No-6382) AYP18/No:221

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அண்மையில்) (சி-27488)